052

Estd. 1935 Phone: 857

SARGUNA PHARMACY
TIRUNELVELI JN.
(S. INDIA)

*

# CATALOGUE & PRICE LIST

FOR
RELIABLE
INDIAN MEDICINES
1973

*

சற்குண மருந்துச்சாலை
திருநெல்வேலி ஜங்ஷன்
( தென் இந்தியா )

# சற்குண
# நீரழிவு நிவாரண பஸ்பம்

நீரிலுள்ள சர்க்கரையை நீக்கி அடிக்கடி நீர் போவதையும் குறைக்கிறது. நரம்புகளுக்கு நல்ல பலம் கொடுக்கிறது. நீரழிவு வியாதிக்குச் சிறந்த மருந்து. காலை வெறும் வயிற்றிலும் மாலை 5 முதல் 7 மணிக்குள்ளாகவும் பஸ்பத்தை அளவுப்படி தேனில் கலந்து சாப்பிடவேண்டும். பத்திய விபரம் பஸ்பத்துடன் தருகிறோம்.

40 வேளை மருந்து விலை ரூ. 15/-

குறிப்பு: மருந்து சாப்பிடுமுன் நீரை சோதித்துக் கொள்ளவும். 40 வேளை பஸ்பம் சாப்பிட்டு முடித்த பின்பு நீரை சோதித்தால் ஆண்டவன் கிருபையால் சர்க்கரை வியாதி குணமான விபரம் தெரியலாம்.

ஸ்தாபிதம் : 1935 போன் : 857

# சற்குண மருந்துச்சாலை

## திருநெல்வேலி ஜங்ஷன்

ஸ்தாபகர் :

ஹாஜி மு. ந. முஹம்மது சாஹிப் அவர்கள்

தென்காசி

# சற்குண மருந்துகளின் அட்டவணை

# &

# கிரய ஜாபிதா

அதிபர் :

M. ஜமால்முஹம்மது சாஹிப்

(Registered Medical Practitioner)

**1973**

விலை பைசா 50

# சற்குண மருந்துச்சாலை,

*H. O. திருநெல்வேலி ஜங்ஷன்.*

**ஏஜண்டுகள் :**

M/s. மன்ஸர் புக்செண்டர்
198, அங்கப்பநாய்க்கன் தெரு, சென்னை-1.

M/s. K. M. மெடிக்கல் ஸ்டோர்ஸ்
அம்மன் சன்னதி, திண்டுக்கல்-1.

J. அப்துல்லா
நிர். 1 கீழ ஆவணி மூலவீதி, மதுரை–1.

K. M. மீராமுகையதீன் சாகிபு
தெற்குமாசி வீதி, தென்காசி.

M/s. முகையதீன் ஸ்டோர்ஸ்
கடையநல்லூர்.

K. பீர்முஹம்மது சாஹிப்
ரயில்வே ரோடு, செங்கோட்டை.

E. ஜலால் பீர்முஹம்மது இராவுத்தர்
பள்ளிவாசல் ரோடு, பண்புளி, தென்காசி T. K.

S. மாணிக்க ஆசாரி
188/4, வடக்கு ரதவீதி, விக்கிரமசிங்கபுரம்.

அருணாசலத்தம்மாள்
ஷாப் வியாபாரம்
மெயின் ரோடு, அம்பாசமுத்திரம்.

# எங்கள் தயாரிப்புகளின் அட்டவணை


| வரிசை எண் | | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 1. | சற்குண அக்ஸீர் தைலம் | | ... | 9 |
| 2. | ,, | அஸ்வகெந்திலேகியம் | ... | 10 |
| 3. | ,, | அப்ரக செந்தூரம் | ... | 17 |
| 4. | ,, | அப்ரக காந்த செந்தூரம் | ... | 18 |
| 5. | ,, | அயக் காந்த செந்தூரம் | ... | 20 |
| 6. | ,, | அமிர்த கஸ்தூரி லேகியம் | ... | 24 |
| 7. | ,, | அம்பர் லேகியம் | ... | 24 |
| 8. | ,, | அம்பர் டானிக் பில்ஸ் | ... | 25 |
| 9. | ,, | ஆரோக்கிய சூரணம் | ... | 26 |
| 10. | ,, | ஆரோக்கிய லேகியம் | ... | 26 |
| 11. | ,, | உருக்கு செந்தூரம் (101 புடம்) | ... | 18 |
| 12. | ,, | இருதய பலகாரி மாத்திரை | ... | 25 |
| 13. | ,, | கஸ்தூரி மாத்திரை | ... | 2 |
| 14. | ,, | கணை எண்ணெய் | ... | 3 |
| 15. | ,, | கரப்பான் எண்ணெய் | ... | 4 |
| 16. | ,, | கபாலசம்ரக்ஷ்ணி லேகியம் | ... | 8 |
| 17. | ,, | கருப்பு பற்பொடி | ... | 12 |
| 18. | ,, | கல்நார் பற்பொடி | ... | 13 |
| 19. | ,, | கருவங்க பஸ்பம் | ... | 18 |
| 20. | ,, | காலரா மாத்திரை | ... | 7 |
| 21. | ,, | காளமேக நாராயண செந்தூரம் | ... | 20 |
| 22. | ,, | குத்திருமல் மருந்து | ... | 4 |
| 23. | ,, | கோரோசனை மாத்திரை | ... | 7 |
| 24. | ,, | சஞ்சீவி செந்தூரம் என்னும் தளசெந்தூரம் | ... | 1 |
| 25. | ,, | சஞ்சீவி ஷர்பத் | ... | 5 |
| 26. | ,, | சர்மரோக நிவாரணத் தைலம் | ... | 7 |
| 27. | ,, | சற்குண மாத்திரை | ... | 12 |
| 28. | ,, | சர்வகுணரச செந்தூரம் | ... | 19 |

| வரிசை எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 29. | சற்குண | சஞ்சீவி பஸ்பம் ... | 20 |
| 30. | ,, | சஞ்சீவி மெழுகு ... | 27 |
| 31. | ,, | சர்வாங்கத் தைலம் ... | 27 |
| 32. | ,, | சிவப்பு பற்பொடி ... | 12 |
| 33. | ,, | சித்தர் சூரணம் ... | 26 |
| 34. | ,, | சித்தாதி எண்ணெய் ... | 29 |
| 35. | ,, | ஜீரணசஞ்சீவி லேகியம் ... | 10 |
| 36. | ,, | ஸ்யவனப் பிராஸ்லேகியம் ... | 10 |
| 37. | ,, | சுகபேதி ஹல்வா ... | 6 |
| 38. | ,, | சுகசஞ்சீவி எண்ணெய் ... | 13 |
| 39. | ,, | (ஸ்பெஷல்) சுக சஞ்சீவி எண்ணெய் ... | 16 |
| 40. | ,, | தங்க செந்தூரம் ... | 16 |
| 41. | ,, | தாளக செந்தூரம் ... | 21 |
| 42. | ,, | நேத்திர ரத்ன தைலம் ... | 8 |
| 43. | ,, | நாக பஸ்பம் ... | 19 |
| 44. | ,, | பலாஸிபா லேகியம் (யூனானி) ... | 13 |
| 45. | ,, | பஞ்சலோக செந்தூரம் ... | 20 |
| 46. | ,, | பவள பஸ்பம் ... | 21 |
| 47. | ,, | பலா அஸ்வகெந்திலாக்ஷாதி தைலம் ... | 27 |
| 48. | ,, | மலசுத்தி லேகியம் ... | 25 |
| 49. | ,, | மாந்த மாத்திரை ... | 3 |
| 50. | ,, | முஸபி லேகியம் ... | 25 |
| 51. | ,, | ரசசெந்தி மெழுகு ... | 11 |
| 52. | ,, | ரோஜா அமிர்த எண்ணெய் ... | 26 |
| 53. | ,, | வலிநிவாரணத் தைலம் ... | 6 |
| 54. | ,, | வாயு மாத்திரை (ஸ்பெஷல்) ... | 7 |
| 55. | ,, | வாயு லேகியம் ... | 11 |
| 56. | ,, | வில்வாதி லேகியம் ... | 5 |
| 57. | ,, | விஷ மை ... | 8 |
| 58. | ,, | வீரியவிருத்தி லேகியம் ... | 5 |
| 59. | ,, | வெள்ளி பஸ்பம் ... | 16 |

பிஸ்மில்லாஹ்

# முகவுரை

பூர்வ காலத்திலிருந்தே இந்தியர்கள் வைத்திய சாஸ்திரத்தில் விசேஷ முன்னேற்றமடைந்திருப்பது உலகப் பிரசித்தமானது. இந்திய வைத்திய சாஸ்திரத்திற்கு ரிஷிகளும், சித்தர்களுமே மூல பிதாக்கள். அவர்கள் காலத்திற்குப் பின்னால், இந்தியர்கள் வைத்திய சாஸ்திரத்தை ஆராய்ச்சி செய்து விருத்தி செய்யாமல், முன் இருந்த நிலைமையிலேயே விட்டு வைத்திருந்த போதிலும், அநேகமாக எல்லா வியாதிகளையும் சுகப்படுத்தக்கூடிய கைகண்ட மருந்துகள் இந்திய வைத்திய நூல்களிலிருந்து வருவதை!எவரும் மறுக்க முடியாது.

இந்நாட்டு வைத்தியத்தை ஆயுர்வேதம், சித்த வைத்தியம் என்னும் இரு பிரிவாகப் பிரிக்கலாம். ஆயுர்வேதத்தின் முதல் நூற்களெல்லாம் சமஸ்கிருத பாஷையிலுள்ளவை. ஆதியில் அவைகள் தன்வந்தரி, பரத்வாஜர், அக்நிவேசர், சரகர் சுஷ்ருதர் முதலிய ரிஷிகளால் இயற்றப்பட்டன. சித்த வைத்தியம் தமிழ் பாஷையிலுள்ளது. அதற்கு மூல நூல் ஆசிரியர்கள் அகஸ்தியர், தேரையர், போகர், புலிப்பராணி முதலிய சித்தர்கள் தாம். பல மருந்துகள் ஆயுர்வேதத்திற்கும் சித்த வைத்தியத்திற்கும் பொதுவாயிருந்தபோதிலும், சித்த வைத்தியத்தில் லோகங்களையும், ரச கெந்தக பாஷாணங்களையும், அதிகமாகக் கையாளப்பட்டு வருகின்றன. ஆயுர்வேத வைத்தியர்கள் லோகங்களையும் ரச கெந்தக பாஷாணங்களையும், மூலிகைகளைக் கொண்டு பஸ்ப செந்தூரங்களாக நீற்றி உபயோகித்து

வருகிறார்கள். சித்த வைத்தியர்கள் மூலிகைகளினால் நீற்றுவதுடன் பலவித உப்புக்கள், காரசாரங்களைக் கொண்டு திராவகங்கள் ஜெயநீர்கள் செய்து அவற்றைக் கொண்டு லோகங்களையும் ரசகெந்தக பாஷாணங்களையும் நீற்றி வருகிறார்கள். தனி மூலிகைகளினால் ஆவதைவிட திராவகங்கள். ஜெயநீர்களினால் செய்யப்படும் லோகரசகெந்தக பாஷாணங்கள் சேர்ந்து நீற்றப்படும் மருந்துகள் யாதொரு களங்கமுமில்லாமல் பக்குவமாக முடிவாவதுடன் குறைந்த அளவில் சீக்கிரத்தில் நல்ல குணமும் கொடுக்கின்றன. இம்மருந்துகளின் குணங்கள் சரீரத்தின் எல்லாப் பாகங்களிலும் வெகு சீக்கிரத்தில் பரவிவிடுகின்றன. திராவகங்கள் ஜெயநீர்களால் செய்யப்பட்ட மருந்துகளின் குணம் பல வருஷங்களானாலும் குறையாமல் நிலைத்திருக்கும். மூலிகைகளினால் செய்யப்பட்ட பஸ்ப செந்தூரங்களின் குணம் நாள் செல்லச் செல்லக் குணம் குறையும். திராவகங்கள் ஜெய நீர்களைக் கொண்டு முடிக்கப்பெற்ற மருந்துகளினால் குணப்படுத்தப்பட்ட வியாதிகள் பூரணமாய் சுகப் படுத்தப்பட்டு மறுபடியும் திரும்பாது என்பது சித்த வைத்தியக் கொள்கை. அனுபவத்திலும் அது சரியாகத்தான் தெரிகிறது. சித்தர்கள் லோகம் ரசகெந்தக பாஷாணங்களை மூலிகைகளைக் கொண்டு நீற்றுவதாயிருந்தாலும் மூலிகையுடன் "குரு" என்றவிசேஷ மருந்தைச் சேர்த்துத்தான் நீற்றுவார்கள். தனி மூலிகையைக் கொண்டு செய்யப்படும் பஸ்பசெந்தூரங்களைவிட, மூலிகையுடன் குரு சேர்த்துச் செய்யப்படும் நீற்று மருந்துகள் பன்மடங்கு விசேஷ குணமுடையனவாயிருக்கின்றன.

குருவென்பது பல உப்புக்கள் உபரசங்களைச் சேர்த்து செய்யப்படும் விசேஷ பஸ்பம். அதை முப்பூ என்றும் சொல்வார்கள். முப்பூ, திராவகம், ஜெயநீர்

முதலியவற்றை எல்லோரும் எளிதில் செய்து கொள்ள முடியாது. செய்யும் முறை மிகவும் இரகசியமாகவே வைக்கப்பட்டு வந்திருக்கிறது. செய்வதிலும் சில சமயந்தான் சரியாக முடியும். பல மேலான மருந்துகளின் முறைகள் எழுதிவைக்கப் படாமல் பலரின் ஞாபகத்திலே வைக்கப்பட்டிருந்தன. அவர்கள் காலத்திற்குப்பின் அம் முறைகள் உலகத்திற்குப் பயன்படாமல் அவர்களோடு மறைந்துபோயின. எல்லாம் வல்ல இறைவனின் கிருபை யாலும் பெரியோர்களின் ஆசீர்வாதத்தாலும் திராவகம், ஜெயநீர், குரு இவைகளின் செய்முறைகளும் இவற்றைக் கொண்டு பல உயர்ந்த பஸ்ப செந்தூரங்களை செய்யும் முறைகளும் பல மேதாவிகளின் மூலம் எனக்குக் கிடைத்தன. ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்தும் பல காலம் அத்தொழிலில் ஈடுபட்டும் எத்தனையோ ருந்துகளைச் செய்தேன். நான் செய்த பல மருந்துகளில் சில மருந்துகள் மட்டும் சரியாக முடிந்தன. அவற்றிலும் வெகு சொற்பமான மருந்துகளே வியாதி களுக்கு உபயோகமாயிருந்தன. பல மருந்துகளில் நான் எடுத்த சிரமமும் செய்த செலவும் வீணாய்ப்போயின. நான் செய்த அனுபவத்தில் சிறந்ததாகக் காணப்பட்ட சில முக்கியமான மருந்துகளை மட்டும் இப்பிரசுரத்தில் வெளியிட்டிருக்கின்றேன்.

இந்தியாவில் முஸ்லிம்களின் ஆட்சி வந்த பின் யூனானி வைத்தியமும் இங்கு கையாளப் பட்டு வருகின்றது. யூனானி மருந்துகள் சாப்பிட மதுரமாக இருப்பதுடன், அவைகளை உபயோகிக்கும்போது அதிகமான பத்தியமும் அனுஷ்டிக்க வேண்டியதில்லை. உஷ்ணரோகங்களுக்கும், இருதயம், மூளை, ஈரல், குண்டிக்காய் (Kidney) சம்பந்தமான ரோகங்களுக்கும் நரம்பு பலவீனம்தாது நஷ்டம் முதலியவைகளுக்கும்

யூனனி வைத்தியத்தில் நல்ல குணம் கொடுக்கக் கூடிய உயர்ந்த மருந்துகள் இருக்கின்றன. தங்கம், முத்து, மாணிக்கம், அம்பர், கஸ்தூரி, குங்குமப்பூ, சாலாமிஸ்ரி, அகர் முதலிய விலை உயர்ந்த வஸ்துக்கள் முக்கியமான யூனனி மருந்துகளில் சேருவதால் முக்கிய மருந்துகளின் விலை கூடுதலாகத்தான் இருக்கும். நான் வைத்திய குடும்பத்தைச் சேர்ந்தவனல்ல. ஆனால் என்னுடைய சிறு வயதிலிருந்தே பல சந்நியாசிகள், மஸ்தான்கள், பெயர் பெற்ற வைத்தியர்கள் யூனனி ஹக்கீம்கள் இவர்களுடன் நெருங்கிய சகவாசம் செய்யக் கூடிய சந்தர்ப்பங்கள் கிடைத்தமையால் என்னையறியாமலே நான் வைத்தியம் தெரிந்து கொள்ள ஏதுவாயிற்று.

எங்கள் மருந்துச் சாலையில் சுமார் ஐநூறுக்கு மேலான, அநேக தினுசான மருந்துகள் இருந்து வருகின்றன. சாதாரணமாக உபயோகத்திலிருந்துவரும் மருந்துகளையும் எல்லோரும் எளிதில் செய்யக்கூடாததும் அதிகமான பொருள் செலவு செய்தும் மிகவும் பிரயாசைப் பட்டு நீடித்த நாள், முயற்சியின் பேரில் முடிக்கக் கூடியதும், அனுபவத்தில் சிறந்ததாகக் காணப்படுவது மான சில முக்கியமான சித்த, ஆயுர்வேத, யூனனி மருந்துகளை மட்டும் இப்பிரசுரத்தில் வெளியிட்டுள்ளேன். முறைப்படி முடிக்கப்பட்ட மருந்துகள் குணத்தில் சிறந்தவை. சுத்திக்கிரமப்படி சுத்தி செய்யாததாலும் சிரமம் எடுத்து முறையின்படி மருந்துகளைச் செய்யாததாலும் மருந்துகள் சரியான பக்குவமாவதில்லை. அதனால் குணக்கேடு உண்டாகி சித்த வைத்தியத்திற்கே கெட்ட பெயர் உண்டாக ஏதுவாகிறது.

மருந்து செய்வதில் பக்குவம் சரியாகவில்லை யென்றாலும் மருந்தைப் பற்றி சந்தேகம் ஏற்பட்டாலும், எத்தனை பிரயாசையுடன் எவ்வளவு பொருள் செலவு

செய்து முடித்த மருந்தாயிருந்தாலும் அதைத் தூரஎறிவ தின்றி உபயோகிப்பதில்லை. சுத்தி செய்ய வேண்டிய சரக்குகளை முறைப்படி சுத்தி செய்து மருந்துகளுக்குச் சேர்ப்பதுடன் பஸ்ப செந்தூரங்கள் முடிந்த பின்பு அவைகளைச் சரியானபடி சோதனை செய்த பின்பே உபயோகத்திற்குக் கொண்டு வருகிறோம்.

மருந்துகளில் தங்கம், முத்து, மாணிக்கம், நற்பவளம் கஸ்தூரி, கோரோசனை, அம்பர் முதலிய விலை உயர்ந்த வஸ்துக்கள் சேர்க்கப்பட வேண்டிய போது எவ்வளவு விலையானாலும் உயர்ந்த அசல் சரக்குகளைச் சேர்ப்பதன்றி விலையிறக்கமுள்ள மட்டச் சரக்குகளைச் சேர்ப்பதில்லை. மேற்கூறிய விஷயங்களின் உண்மையை எங்களைத் தெரிந்தவர்கள் நன்கு அறிவார்கள். எங்கள் மருந்துச் சாலையிலுள்ள மருந்துகளைப் பற்றிக் கொஞ்சமும் சந்தேகப்பட வேண்டியதில்லை.

சரீரத்தில் (Vitality) என்னும் ஜீவசக்தி பலமா யிருக்கும்போது ஒரு வியாதியும் சரீரத்தில் அணுகுவ தில்லை. இரத்தத்தைச் சுத்தப்படுத்தி ஜீவசக்தியைப் பலப்படுத்தினல் சரீரத்தில் உண்டாகும் எல்லா வியாதி களும் சுகப்படும் என்பது ரிஷிகள், சித்தர்களின் கோட்பாடு. அக்குணங்களை உண்டாக்கும் மருந்துகளை கல்பம் என்றும் ரஸாயனம் என்றும் சொல்லுவார்கள். கல்ப மருந்துகள் பல நோய்களையும் சொஸ்தப்படுத்து வதுடன் சரீரத்தில் நோய் அணுகாமல் செய்து சரீர பலத்தைப் பாதுகாக்கவும் வயதை நீடித்திருக்கவும் செய்யும். இந்த அடிப்படைக் கோட்பாட்டின் பேரில் தான் ஒரே மருந்தைப் பல அனுப்பானத்துடன் பல வியாதிகளைக் குணப்படுத்துவதற்குச் சித்தர்கள் உபயோகப்படுத்தி வந்திருக்கிருர்கள். கல்பமருந்து துகளை உபயோகிப்பதால் சரீரத்தில் வியாதி உண்டா

காமல் பாதுகாப்பதுடன் சரீரத்தில் நரை, திரை சீக்கிரம் ஏற்படாமல் பாதுகாக்கும். சிறு வயதில் ஏற்பட்ட நரையையும் மாற்றும். அது சரியானதாகவே அனுபவத்திலும் தெரியவருகிறது. கல்ப மருந்துகள் சரீரத்தை நல்ல நிலைமையில் வைப்பதற்கு மிகவும் பயன்படுகின்றன. அவ்வாருன கல்ப மருந்துகளும் எங்களிடம் உண்டு.

சித்த வைத்தியத்தின் மேன்மையைப் பிரத்தியக்ஷமாக காட்டுவதற்கு எங்கள் விஷமை ஒன்றே போதுமானது. கொடும் விஷப்பாம்பின்கடி, எலிக்கடி, பூனைக் கடி, வண்டுகடிக்கு ஒருவேளை மருந்தில் நாயன் கிருபையால் குணம் கொடுக்கக்கூடியது. 50 வருஷ காலம் அனுபவத்திலுள்ளது. ஆயிரக்கணக்கான மனிதர்கள், மாடுகள் முதலியவற்றிற்குப் பயன் கொடுத்து வருவது. இனுமாகக் கொடுக்கப்படுகிறது.

இச்சிறு கிரய ஜாபிதாவில் உள்ள மருந்துகள் வியாதியஸ்தருக்கு மட்டுமின்றி வைத்தியர்களுக்கும் மிக்க பிரயோஜனமானவை. அம்மருந்துகளை உபயோகித்துக் குணம் தெரிந்தவர்கள் நம் நாட்டு மருந்துகளின் சிலாக்கியத்தை நன்கு தெரிவார்கள்.

வியாதியஸ்தர்கள் வியாதியின் முழு விபரத்தையும் எழுதினுல் அதற்குத் தக்க மருந்துகளைக் குறிப்பிட்டு எழுதுவோம்.

எங்கள் மருந்துகளை ஒருதடவை பரிக்ஷை செய்து பார்க்கும்படி வைத்திய சகோதரர்களையும் மற்றும் கனவான்களையும் வேண்டிக் கொள்கிருேம்.

எனக்கு வயதாகிவிட்டதால் என் மூத்த குமாரர் M. ஜமால் முஹம்மது சாஹிபிடம் மருந்துச்சாலையின் முழு நிருவாகத்தையும் ஒப்படைத்திருக்கிறேன்.

என்னுடன் அவரும் இந்த மருந்துச்சாலையில் சென்ற 27 வருடங்கள் கூட இருந்து அனுபவம் பெற்றிருக்கிறார். அதனால் முன்போல் அவருக்கும் தங்கள் முழு ஆதரவு கொடுக்க கேட்டுக்கொள்கிறேன்.

2—2—1973

மு ந. முஹம்மது சாஹிப்
ஸ்தாபகர்

M. ஜமால் முஹம்மது நத்தர்பாவா
புரோப்ரைட்டர்.

---

**குறிப்பு:—** இந்த கிரய ஜாபிதாவில் இல்லாத வேறு அநேக வித மருந்துகளும் எங்களிடம் உண்டு. சில பெண்களுக்கு நான்கு ஐந்து மாதம் கருப்பம் சிதைவு ஏற்படும். ஒரு தடவை ஏற்பட்டால் அதன் பின் கருப்பம் தங்காமல் தொடர்ச்சியாக அப்படி ஏற்படும். சில பெண்களுக்குக் குழந்தைகள் பிறந்தாலும் பலவீனமான குழந்தைகளா யிருந்து ஒரு வயது இரண்டு வயதுக்குள் மரித்துவிடும். சில பெண்களுக்குக் கருப்பம் உண்டாவதில்லை. இது ஒருவரின் குறையாயும் புருஷன் மனைவி இருவரிடமுள்ள குறையாயும் இருக்கலாம், இம்மாதிரியான வியாதிகளுக்கும் ஆண் தன்மையில்லாதிருப்பதற்கும் யூனானி முறையில் நல்ல குணம் கொடுக்கக்கூடிய சிகிச்சையுண்டு, விலை உயர்ந்த மருந்துகள் ஆர்டரின் பேரில் செய்து கொடுக்கப் படும்.

யாஷாபி

# மருந்துகளின் விபரம்

## சற்குண சஞ்சீவி செந்தூரம்

என்னும்

## தள செந்தூரம்

இம்மருந்து 40 வருஷங்களுக்கு அதிகமான அனுபவத்திலுள்ளது. சிறுகுழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை யாவருக்கும் கீழ் குறிப்பிட்ட வியாதிகளுக்கு உபயோகமானது. இது கைவசமிருந்தால் வைத்தியர் பக்கத்திலிருப்பது போலாகும்.

ஜுரம், ஜன்னி, வாயு, வாதம், பக்கவாதம், உடல்வலி, எய்ப்பு, இளைப்பு, ஜலதோஷம், நெஞ்சில் கபக்கட்டு, சளியுடன் கூடிய இருமல், கக்குவான் என்னும் குத்திருமல், அதிகம் மூத்திரம் போதல், அசதி, நரம்புத் தளர்ச்சி இவைகளுக்கு நாயன் கிருபையால் விசேஷ குணம் கொடுக்கும்.

பிரசவித்த ஸ்திரீகளுக்கு இரண்டு மூன்று நாட்கள் இதைக் கொடுத்தால் இசிவு, ஜன்னி, கைகால் குளிர்ச்சி, ஜுரம் வராமல் பாதுகாப்பதுடன், உடம்பையும் பலப்படுத்தும்.

அசதி, அலுப்பாயிருக்கும் சமயம் ஒன்றிரண்டு வேளை உபயோகித்தால் உடன் குணம தெரியும். வயதானவர்களுக்கு இது ஊன்றுகோல் போன்றது.

### பொதுவாக

உடம்பு அசதி, பலஹீனத்துக்கும் குளிர்ந்த வாடை அதிகமாக இருக்கும்போதும் தேனில் கலந்து சாப்பிடவும். உஷ்ணம் அதிகம் இருந்தால் பசு நெய் அல்லது வெண்ணெய்யுடன் கலந்தும் காலை மாலை ஆகாரத்துக்கு முன் சாப்பிடவும்.

விசேஷ பத்தியமில்லை; பழையது, மீன் முதலியன நீக்கவும்.

**உபயோகிக்கும் அளவு**

| | | |
|---|---|---|
| 1 வயது வரை | ½ முதல் 1 | அரிசிப் பிரமாணம் |
| 2 வயது முதல் 3 வயது வரை | 1 ,, 1½ | ,, |
| 3 ,, 7 ,, | 1½ ,, 2 | ,, |
| 7 ,, 15 ,, | 2 ,, 3 | ,, |
| பெரியவர்களுக்கு | 3 ,, 5 | ,, |

15 வேளை செந்தூரம் உள்ள சீசா ஒன்று விலை ரூ. 5—00

## சற்குண கோரோசனை மாத்திரை

மலத்தைப் போக்குவதற்காக உபயோகமானது. வயிற்று வலி, வயிற்றுப்பிரட்டல், உஷ்ணப்படுத்தல், வாந்தி முதலிய துர்க்குணங்கள் உண்டாக்காமல் மலத்தைப் போக்கும். குழந்தைகளுக்கு ஜுரத்திலும், உடம்புவலி, மலக்கட்டு இருக்கிற சமயங்களிலும் உபயோகிக்கத் தகுந்தது.

3 மாதம் முதல் 6 மாதம் வரை ½ முதல் 1 மாத்திரை
6 மாதம் முதல் 1 வருஷம் வரை 1 முதல் 2 மாத்திரை
1 வருஷம் முதல் 3 வருஷம் வரை 2 மாத்திரை
பெரியவர்களுக்கு 3 முதல் 5 மாத்திரை

இஞ்சிச்சாறு, துளசிச்சாறு, தாய்ப்பால், வென்னீர் இவற்றில் ஏதாவது ஒன்றில் உரைத்து வியாதிக்குத் தகுந்த படி உபயோகிக்கலாம்.

**குறிப்பு:—** பெரியவர்களும் படுக்கைக்குப் போகும்போது இரண்டு மாத்திரையை கொஞ்சம் தண்ணீருடன் சாப்பிட்டுப் படுத்தால் காலையில் ஒரு தடவை நன்றாக மலம் போகும். அதாவது இரா மாத்திரை (Night Pills) ஆக உபயோகிப்பதற்குத் தகுந்தது. இரவு ஆகாரம் சாப்பிட்டு இரண்டு மணி நேரம் கழித்து சாப்பிடவும்.

25 மாத்திரைகள் கொண்ட பாட்டில் ரூ. 2—00

## சற்குண கஸ்தூரி மாத்திரை

ஜுரம், ஜன்னி, மாந்தம், மாந்த ஜன்னி, இளைப்பு காசம், கபக்கட்டு, ஜலதோஷம், உடம்பு வலி இவைகளுக்கு உபயோகமானது.

இஞ்சிச்சாறு, வெற்றிலைச்சாறு, தாய்ப்பால், தேன் இவற்றில் ஏதாவதொன்றுடன் சேர்த்து உரைத்துக் கொடுக்கலாம். ஒன்றும் அகப்படாத சமயங்களில் தேன் அல்லது வென்னீருடன் சேர்த்துக் கொடுக்கலாம். இம் மாத்திரை மலத்தைக் கட்டாது. பெரியவர்களும் உபயோகிக் கலாம்.

3 மாதக் குழந்தைகளுக்கு ½ மாத்திரை
6 ,, ,, 1 ,,
6 மாதம் முதல் 2 வருஷம் வரை 1 முதல் 2 மாத்திரை

பெரியவர்களுக்கு 3 முதல் 5 மாத்திரை

25 மாத்திரைகள் கொண்ட பாட்டில் ரூ. 2—50

## சற்குண மாந்த மாத்திரை

குழந்தைகளுக்கு அடிக்கடி உண்டாகக்கூடிய வியாதிகளில் மாந்தமும் ஒன்று. மாந்தம் ஏற்பட்டால் குழந்தைகளுக்குப் பால் ஜீரணமாகாமல் மலமும், வாந்தியும் போய்க்கொண் டிருக்கும்; வயிற்றுப்பிசமும் இருக்கும். இம்மாத்திரைகள் வாந்தியையும், கொல்லையையும் நிறுத்தி வயிற்றுப்பிசத்தையும் நீக்கி நல்ல ஜீரண சக்தியை உண்டாக்கும். பசுவின் பாலைக் கட்டி விழாமல் ஜீரணிக்கச் செய்யும். பலவிதமான ரோகங் களுக்கும் உபயோகமானது. தாய்ப்பால் அல்லது வென்னீ ருடன் கொடுக்கவும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | மாதம் | முதல் | 7 | மாதம் | வரை | ½ மாத்திரை |
| 6 | ,, | ,, | 1 | வருஷம் | ,, | 1 ,, |
| 1 | வருஷம் | ,, | 2 | ,, | ,, | 1 முதல் 2 ,, |

25 மாத்திரைகள் கொண்ட பாட்டில் ரூ. 1—50.

## சற்குண கணை எண்ணெய்

குழந்தைகளுக்கு கணைச்சூடு, வறட்சி, இளைத்துப்போதல் முதலியவைகளுக்கு நல்லது. சரீரத்தைப் புஷ்டியாக்கும். இரவில் படுக்கைக்குப் போகும்போது தனியே அல்லது பசுவின்

பாலில் விட்டுக்கொடுக்கவும். கற்கண்டுத்தூள் செய்து சேர்த்துக் கொடுக்கவும்.

**குறிப்பு:-** பெரியவர்களுக்கும் நீர்க்கடுப்பு, நீர் எரிச்சல், மேக உஷ்ணம், மலக்கட்டு இவைகளுக்கு நல்லது.

30 மி. லி. 0—60

எண்ணெய் சாப்பிட முடியாதவர்களுக்கு களிம நெய் தயார் செய்து கொடுக்கலாம்.

## சற்குண கரப்பான் எண்ணெய்

குழந்தைகளுக்குச் சாதாரணமாக உண்டாகும் பலவித கரப்பான் சொரி, சிரங்கு முதலிய தோல் சம்பந்தமான வியாதிகளுக்கும், பெரியவர்களுக்கும் உண்டாகும் தோல் சம்பந்தமான வியாதிகளுக்கும் நாயன் அருளால் நல்ல குணம் கொடுக்கக் கூடியது.

**குறிப்பு:-** எண்ணெய்யை உள்ளுக்குக் கொடுத்து அதையே புண்கள் உள்ள இடங்களில் மேலே தடவவும். சீக்கிரமாகப் புண்களை ஆற்றும். தாய்ப்பால் அருந்தக்கூடிய குழந்தைகளுக்குச் சீக்கிரமாகக் குணம் தெரியவேண்டுமானால் தாய், புளி முதலிய விஷ பதார்த்தங்களை நீக்கவேண்டும். பெரியவர்களுக்கு விஷப்பத்து, யானைச்சொறி, திமிர், ஆரம்பக் குஷ்டம், அரையாப்பு முதலியவைகளுக்கு நாயன் அருளால் நல்ல குணம் கொடுக்கக்கூடியது. குழந்தைகளுக்கு ஒரு டீஸ்பூன் அளவும், பெரியவர்களுக்கு அரைமுதல் முக்கால் அவுன்ஸ் அளவும் கொடுக்கவேண்டும். பெரியவர்களுக்கு காய்ச்சிய பாலில் விட்டுக் கொடுக்கவும். பாலில் ஜீனி சேர்க்கலாம்.

30 மி. லி. பாட்டில் 0—60.

## சற்குண குத்திருமல் மருந்து

இது குழந்தைகளுக்கு உண்டாகும் குத்திருமலை நிறுத்தக் கூடிய விசேஷமான மருந்து. இம்மருந்து தேன்போல்

இனிப்பாக இருக்குமாதலால் குழந்தைகள் பிரியமாகச் சாப்பிடக்கூடியது. பார்ப்பதற்குப் பயத்தை உண்டாக்கும் நிலைமையில் உள்ள குத்திருமலையும் சாந்தப்படுத்தி நாளடைவில் பூரண சுகத்தைக் கொடுக்கும்.

30 மி. லி. பாட்டில் ரூ. 1—00

## சற்குண சஞ்சீவி ஷர்பத்

**(ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டியது)**

அஜீரணம், வயிற்றோட்டம், வாந்தி, வாந்திபேதி, பித்தம், கிறுகிறுப்பு, வாய்க் கசப்பு, வாய் மழுமழுப்பு, தலை சுழற்றல் முதலிய பல வியாதிகளுக்கும் உபயோகமாகக்கூடியது. சிறு குழந்தைகள் முதல் யாவரும் யாதொரு பயமுமின்றி உபயோகிக்கலாம். அஜீரணத்தால் ஏற்பட்ட மலப்போக்குக்கும், காலரா என்னும் வாந்திபேதிக்கும் ஆரம்பத்தில் கொடுத்தால் இது விசேஷ குணத்தைக்கொடுக்கும். அஜீரணத்திற்கு ஒன்றிரண்டு வேளை சாப்பிட்டால் குணம் தெரியும். பித்தம், வாய்க்கசப்பு முதலியவைகளுக்கு ஒரு டீஸ்பூன் அளவு கொடுக்கவும். தினம் 2 அல்லது 3 வேளை கொடுக்கலாம்.

30 மி. லி. பாட்டில் 0—60

## சற்குண வீரிய விருத்தி லேகியம்

இம்மருந்து இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தி, இழந்து போன வீரியத்தை சரீரத்தில் படிப்படியாக உண்டாக்குகின்றது. நல்ல வீரிய விருத்தியைக் கொடுக்கின்றது. கேடு செய்யக்கூடிய மருந்து ஒன்றும் இதில் சேர்க்கப்படவில்லை. இதை உயர்ந்த செந்தூரங்களுடன் உபயோகித்து வந்தால் விசேஷ பலனைக்கொடுக்கும். காலை, மாலை அரைத்தோலா வீதம் கொஞ்சம் பால் அல்லது தண்ணீருடன் சாப்பிடவும்.

10 நாள் 20 வேளை லேகியம் விலை ரூ. 5—00

## சற்குண வில்வாதி லேகியம்

இது நம் நாட்டு மருந்துகளில் சாஸ்திரோக்தமான விசேஷ மருந்து. பித்தம், உப்பிசம், உஷ்ணவாயு, கை, கால்

எரிவு அரோசகம், அன்னதுவேஷம், வாய்க்கசப்பு, வாந்தி, விக்கல், வெள்ளோக்காளம், அஸ்திஜுரம், மயக்கம், கிறுகிறுப்பு, குலைஎரிவு, குன்மம், மேல்மூச்சு, அஜீரணபேதி, கிராணிகழிச்சல், காமாலை, சோகை, பாண்டு, நீரிழிவு, முதலிய பல வியாதிகளுக்கும் குணம் கொடுக்கக் கூடியது. காலையும், மாலையும் அரை தோலா வீதம் சாப்பிடவும்

10 நாள் 20 வேளை லேகியம் ரூ. 3—00

## சற்குண வலி நிவாரணத் தைலம்

எல்லாவிதமான வலிகளுக்கும் மிகவும் உபயோகமான மருந்து. தலைவலி, கால்வலி, கால் உளைச்சல், கழுத்துவலி, கை உளைச்சல் முதலியவைகளுக்கு வலியுள்ள இடங்களில் தேய்க்கவும். அடிபட்ட காயங்களுக்கு மேலே தடவவும். கபம் கட்டியிருந்தால் மார்பில் தேய்த்து தவிடு ஒத்தனம் கொடுக்கவும்.

½ அவுன்ஸ் 0—50

## சற்குண சுகபேதி ஹல்வா

மலம் கட்டப்பட்ட சமயங்களில் சுகபேதி ஹல்வாவை உபயோகித்து வந்தால் ஒன்றிரண்டு தடவை யாதொரு உபத்திரவமும் இல்லாமல் கொல்லைபோகும். பழங்களும் யூனானி மருந்துகளும் சேர்த்துச் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமாயிருக்கும். நேர்வாளம் சேர்க்கப்படவில்லை.

உபயோகம்:— இரவு ஆகாரம் சாப்பிட்டு இரண்டு மணி நேரம்சென்று படுக்கைக்குப் போகுமுன் சாப்பிட்டுக்கொஞ்சம் தண்ணீர் அல்லது பால் சாப்பிடவும்.

| | |
|---|---|
| 15 வேளை ஹல்வா சீசா 1-க்கு | ரூ. 2—50 |
| 1 வேளை பாக்கெட் 1-க்கு | 0—20 |
| 12 வேளை பாக்கெட் 1-க்கு | 2—00 |

## சர்ம ரோக நிவாரணத் தைலம்

இது ஒரு பெரியாரின் விசேஷ முறைப்படி செய்யப்பட்டது. குஷ்டம், குஷ்ட ரணம், கிரந்தி, பத்துக்கள், படைகள், புண்கள் இவைகளுக்கு வெளிப்பிரயோகத்திற்கு உபயோகமானது. மேலே தேய்த்து ஸ்நானம்செய்து வருவதால் குஷ்ட ரணங்களை ஆற்றுவதுடன் தடிப்புகளையும் மாற்றிவிடுகிறது.

30. மி. பாட்டில் ரூ. 1—00

## சற்குண வாயு மாத்திரை (ஸ்பெஷல்)

அஜீரணத்தினாலும், மலபந்தத்தினாலும் குடலில் வாயு உற்பத்தியாகிறது. சரீரத்தில் பல பாகங்களிலும் பரவி அதிக வேதனையையும், உபத்திரவத்தையும் உண்டாக்குகின்றது. வாயு உபத்திரவம் உள்ளவர்களுக்குப் பசி சரியானபடி இருப்பதில்லை; மலமும் ஒழுங்காய்க் கழிவதில்லை. சிலருக்குத் திடீரென்று சில சமயங்களில் வாயு உபத்திரவம் உண்டாகி மூச்சு முன்பின் போகாமல் அடைத்துக்கொண்டு அதிகக் கஷ்டத்திற்குள்ளாக்கி விடுகின்றன. இவைகளுக்கு எங்கள் வாயு மாத்திரை அதிகக் குணம் கொடுக்கும். மலத்தை ஒழுங்காக வெளியாக்கி, நல்ல பசியை உண்டாக்கி ஆகாரம் சரியானபடி ஜீரணமாகும்படி செய்து வாயு ரோகத்தை அடியோடு எடுத்துவிடுகின்றது. காலை மாலை ஆகாரத்திற்கு முன் ஒரு மாத்திரை சாப்பிட்டுக் கொஞ்சம் தண்ணீர் அல்லது வெந்நீர் சாப்பிடவும்.

21 மாத்திரையுள்ள டின் ரூ. 2—00

## சற்குண காலரா மாத்திரை

இது ஒரு சன்னியாசியின் முறைப்படி செய்யப்பட்டு ஆயிரக்கணக்கான வியாதியஸ்தர்களுக்குக் கொடுக்கப்பட்டு நாயனருளால் பூரண சுகத்தைக் கொடுத்த அனுபவசித்தமான மருந்து. மனிதனை திடுக்கிடச் செய்யக்கூடிய காலரா என்னும் வாந்தி பேதிக்கு இது சஞ்சீவி. இவ்வியாதியின் ஆரம்பத்திலேயே நாடிகள் தளர்ச்சியடைவதுடன் சரீரமும் குளிர்ச்சியடைந்து விடுகின்றது. இம்மாத்திரை வாந்தியையும்,

கொல்லையையும் நிறுத்தி, சரீரத்தில் உஷ்ணத்தையும், நாடி ஓட்டத்தையும் உண்டாக்கி நீரையும் பிரிக்கிறது. எவ்வித அபாய நிலைமையிலும் உபயோகிக்கக்கூடிய நம்பிக்கையான மருந்து. அஜீரணத்தால் ஏற்படும் வயிற்றுப் போக்குக்கும் இது ஒரு கைகண்ட மருந்து. உபயோக விபரம் மருந்துடன் அனுப்பப்படும்.

25 மாத்திரையுள்ள பாட்டில் ரூ. 2—00

## சற்குண விஷமை

எல்லா விஷப்பாம்புகளின் கடிவிஷம், எலி, பூனை, நாய், வண்டு எல்லாவிதமான கடியினாலும், எச்சத்தினாலும் மனிதர்களுக்கும், ஆடு, மாடு முதலிய மிருகங்களுக்கும் ஏற்படும் விஷத்திற்கு நாயனருளால் ஒரே வேளை மருந்தில் சுகம் கொடுக்கும் கைகண்ட மருந்து. இலவசமாய்க் கொடுக்கப்படும். கூடுதலாக வேண்டுமானால் 1 தோலா ரு, 10/-க்குக் கொடுக்கப்படும்.

## சற்குண நேத்திர ரத்ன தைலம்

கண் வியாதிகளுக்கு மிகவும் விசேஷமானது. இத்தைலம் பலவிதமான மூலிகைகளைக் கொண்டும், கடைச்சரக்குகளைக் கொண்டும் தயார் செய்யப்படுகின்றது. கண் சிவப்பு, கண் பார்வை மங்கல், மூளை பலவீனம், கண்குத்து இவைகளை நீக்கும். இதைத் தொடர்ச்சியாகச் சிரசில் தேய்த்து ஸ்நானம் செய்து வந்தால் கொஞ்ச நாளில் வெள்ளெழுத்து மாறும். மேக ரோகத்தாலும், கிரந்திரோகத்தாலும் மர்மஸ்தானங்களில் உண்டாகும் வீக்கத்தையும் சீக்கிரமாக சொஸ்தப்படுத்தும், கண்ணுக்கு நல்ல குளிர்ச்சியைக் கொடுக்கும். யாவரும் தேய்த்து ஸ்நானம் செய்யலாம்.

30 மி. லி. ரூ. 0—75
60 மி. லி. ரூ. 1—40
120 மி. லி. ரூ. 2—75

## சற்குண கபால சம்ரக்ஷ்ணி லேகியம்

இது ஒன்றிரண்டு தடவை மலத்தைப் போக்கும் தலைக் கனம், தலைவலி, ஒற்றைத் தலைவலி, ஜலதோஷம், நாசிநீர்

ஒட்டம், நாசி அடைப்பு, கண்ணிலிருந்து நீர்வடிதல், காதுக் குத்து, பல்ஈறு வீக்கம் முதலிய கழுத்துக்கு மேற்பட்ட கபாலநீர், கபால வாயு சம்பந்தமான பல வியாதிகளுக்கும் மிகவும் உபயோகமானது.

### உபயோகிக்கும் முறை

இரவு ஆகாரத்தைச் சீக்கிரமாகச் சாப்பிட்டுக் கொண்டு இரண்டு மணி நேரத்திற்குப் பின் மருந்தைச் சாப்பிட்டு மேல் கொஞ்சம் வெந்நீர் சாப்பிடுட் படுத்துக் கொள்ளவும் அல்லது இரவு ஆகாரத்தை வழக்கம்போல் சாப்பிட்டு படுத்துக்கொள்ள வும் பக்கத்தில் கொஞ்சம் வெந்நீர் வைத்துக்கொள்ளவும். இரவு 12 மணிக்குப் பின் விழிப்பு வரும் சமயம் வாய் அலம்பி மருந்தைச் சாப்பிட்டு, மேல் கொஞ்சம் வெந்நீர் சாப்பிட்டு படுத்துக்கொள்ளவும்.

காலையில் ஒன்றிரண்டு தடவை கொல்லை போகும். அன்று முழுதும் குளிக்கக்கூடாது புளி, மோர், பழையது நீக்கவும்.

இந்த மருந்தை முன்நேரத்தில் சாப்பிடுவதை விட பின் நேரத்தில் சாப்பிடுவது நல்லது. வியாதி நீங்தும்வரை மருந்தைத் தொடர்ச்சியாகச் சாப்பிடுவது நல்லது.

### மருந்தின் அளவு

மலச்சிக்கல் இல்லாதவர்களுக்கு ஒரு தோலா, மலச்சிக்க லுள்ளவர்களுக்கு ஒன்றரை தோலா ஒரு வேளைக்கு.

100 கிராம் விலை ரூ. 6—00

## சற்குண அக்ஸீர் தைலம்

இத்தைலம் வாதம், கை கால் உளைச்சல், அடிபட்ட காயம், வாதத்தினுல் ஏற்பட்ட வீக்கம், ஜன்னியினுல் கை, கால் குளிர்ந்து போதல், தலைவலி, காதுக்குத்து, பல்வலி, குழந்தை களுக்கு ஏற்படும் மாந்த வலிப்பு, ஆருத புண்கள், இவை களுக்கு வெளிப்பிரயோகத்தினுல் விசேஷ குணம் கொடுக்கச் கூடியது. மூலிகைகள் சேர்த்துச் செய்யப்பட்டது.

3 மி. லி. பாட்டில் விலை 0—60

## சற்குண அஸ்வ கெந்தி லேகியம்

இது சிறு குழந்தைகளும், கர்ப்ப ஸ்திரீகளும், வயோதிகர் களும் சரீர பலத்திற்காகச் சாப்பிடக்கூடிய மருந்து. இரத்த விருத்தியையும், நரம்பு பலத்தையும் உண்டாக்குகின்றது. பலவீன முள்ள குழந்தைகளுக்கு கொடுத்து வந்தால் அக் குழந்தைகளின் உடம்பை சீக்கிரத்தில் தேற்றிவிடும். க்ஷயம், காசம், சோகை, பாண்டு, காமாலை, பலவீனம், கணைச் சூடு முதலியவற்றிற்கும் இதைக் கொடுக்கவும். மெலிந்த சரீரம் உள்ளவர்களும் உபயோகித்து வந்தால் நல்ல பலன் பெறு வார்கள்.

**பத்தியம் இல்லை**

10 நாள் 20 வேளை லேகியம் ரூ. 4—00

## சற்குண ஜீரண சஞ்சீவி லேகியம்

ஜீரணக் கோளாறுகளைச் சரிப்படுத்துவதில் இது ஒரு அனுபவமிக்க மேலான மருந்து. பித்தத்தை சாந்தி செய்து நல்ல பசியை உண்டாக்குகின்றது. வாயுவைக் கண்டிக் கின்றது. ஆகாரம் நன்கு ஜீரணமாகும்படி செய்கின்றது. இதை உபயோகித்து வந்தால் பித்தம், வாய்க்கசப்பு, மழுமழுப்பு, கக்கல்,வயிற்றுவலி,அன்னதுவேஷம், மாரல்ஜுரம், காசம், வாயு, வயிற்றுப் பொருமல், கிராணி, அதிசாரம், மந்த வாயு, அரோசிகம், குமட்டல், நெஞ்சுத்துடிப்பு, குன்மம், மருந்தீடு முதலிய வியாதிகள் குணமாகும். சிறுகுழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை யாவரும் இதை உபயோகிக்கலாம். சாப்பிட மதுரமானது.

**பத்தியம் இல்லை**

10 நாள் 20 வேளை லேகியம் ரூ. 3—00

## சற்குண ஸ்யவன பிராஸ் லேகியம்

ஆயுர்வேத சாஸ்திரத்தில் மிகவும் பிரசித்திபெற்ற மருந்து. குழந்தைகள் முதல் பெரியோர்வரை யாவரும் யாதொரு

பயமுமின்றி இதை உபயோகிக்கலாம். காசம், சுவாசம், நாவரட்சி, மூத்திரதோஷம், க்ஷயம், இரத்தவாதம், இந்திரிய உடைவு, சரீரமெலிவு, இருதயரோகம், முதலிய பல வியாதிகளுக்கும் இதை உபயோகித்து வந்தால் நல்ல குணம் கொடுக்கும். தாது விருத்தியை உண்டாக்கி தேகத்தைப் பலமடையச் செய்யும். புத்தியை தீக்ஷண்யமாக்கும். ஞாபக சக்தியை அதிகரிக்கும். நுரைஈரலிலுள்ள வியாதிகளைக் குணப்படுத்தி இரத்தத்தைச் சுத்தப்படுத்தி சரீரத்தில் கெட்டுப்போன தசைகளைப் புதுப்பித்து சரீரத்தை புஷ்டியாக்குகின்றது.

10 நாள் 20 வேளை லேகியம் ரூ. 4—00

## சற்குண வாயு லேகியம்

இது அஜீரணம், மலச்சிக்கல், வாயுக்குத்து, வயிற்றுப் பிசம் முதலிய கோளாறுகளை நீக்கி ஆகாரத்தை நன்கு ஜீரணிக்கும்படி செய்து மலத்தையும் போக்குகிறது.

10 நாள் 20 வேளை லேகியம் ரூ. 3—00

## சற்குண ரசகெந்தி மெழுகு

கடின பத்தியமில்லாமல் சாப்பிடக்கூடிய சிறந்த மருந்து. மேகத்திற்கும், மேகத்தினுல் உண்டாகக்கூடிய பலவித ரோகங்களுக்கும் நல்ல பலன் கொடுக்கக்கூடியது. இதை பலவிதமான ரோகங்களுக்கு உபயோகப்படுத்தலாம். ஆனுல் முக்கியமான சில ரோகங்களைமட்டும் இங்கு குறித்திருக்கிறோம். குஷ்டம், திமிர், கண்டமாலை, கிரந்தி அரையாப்பு, மேகசூலை, புற்று, தேகத்தில் விழும் கரும்புள்ளி, மேகஊறல், படர்தாமரை, பவுந்திரம், குழிப்புண்கள், மேக விரணம், தொடை வாழை முதலிய வியாதிகளைச் சுகப்படுத்தும்.

உபயோக விபரம்:— காலை மாலை சுண்டைக்காய் அளவு சாப்பிட்டு மேல் பசுவின் மோர் சாப்பிடவும் விசேஷ பத்தியமில்லை.

20 வேளை மருந்து ரூ. 5—00

## சற்குண மாத்திரை (மலத்தைப் போக்கும்)

இம்மாத்திரை விசேஷ மருந்துச் சரக்குகளால் தயாரிக்கப் பட்டது. இது ஒரு சஞ்சீவிக்கு ஒப்பானது. இது சுகபேதிக்கு முக்கியமான மருந்து. ஜுரம், குன்மம், வாயு, வாதம், பித்தம், இவைகளுக்கு விசேஷ குணம் கொடுக்கும். வியாதிக்குத் தக்கபடி மாத்திரையை நோட்டீஸில் கண்ட அனுப்பானப்படி கொடுக்க வேண்டும். குழந்தைகள், பெரியவர்கள் யாவரும் உபயோகிக்கலாம். வாயு அடைத்து உபத்திரவம் உண்டானல் இஞ்சிச் சாற்றுடன் சாப்பிட்டால் உடன் நாயன் அருளால் குணம் தெரியும்.

25 மாத்திரைகள் கொண்ட பாட்டில் ரூ. 2—00

## சற்குண பற்பொடி (கறுப்பு)

தந்த சம்பந்தமான பலவித ரோகங்களையும் பரிகரிக்கக் கூடியது. இது பற்களை நன்கு சுத்தமாக்குகின்றது. கபத்தை நன்கு வெளியாக்குகின்றது. பல்லரணை, பல்வலி, பல் அசைதல், பல் கூச்சம், பல்லிலிருந்து இரத்தம் வடிதல், ருசியின்மை, தந்த வாயு, வாய்ப்புண் முதலிய தந்த வியாதிகளை சீக்கிரத்தில் சொஸ்தப் படுத்தும். ஒரு தடவை உபயோகித்தவர்கள் இதைக் கைவிட மாட்டார்கள்.

பாக்கெட் 1 ரூ. 0—12
பாக்கெட் 1 டஜன் ரூ. 1—15
டின் 1 ரூ. 0—60

## சற்குண பற்பொடி (சிவப்பு)

இப்பற்பொடியும் தந்தசம்பந்தமான ரோகங்களை நிவர்த்தி செய்து தந்தங்களைக் கெட்டிப்படுத்தும். பல் அசைவு, தந்த சூலை, பல்லரணை, ஈறு தேய்தல், இரத்தம் வடிதல், வாய் நாற்றம், மழுமழுப்பு, வாயில் நீரூறல், முதலியவைகளைக் குணப்படுத்தும்.

1 பாக்கட் 0–12, 12 பாக்கட் ரூ. 1-15, 1 டின் 0–60

## சற்குண கல்நார் பற்பொடி

பல் சம்பந்தமான வியாதிகளுக்கும் பற்களைக் கெட்டிப் படுத்துவதற்கும் சித்த வைத்தியத்தில் கல் நார் பஸ்பம் மிகவும் விசேஷமானது. கல் நார் பஸ்பத்துடன் தந்தங்களுக்குப் பிரயோஜனம் கொடுக்கக் கூடிய மருந்துகள் சேர்த்து மிகுந்த பிரயாசையுடன் தயார்செய்யப்பட்டிருக்கிறது. பல் அசைவு, பல் எகிர்வீக்கம், பல்வலி, பல் குடைச்சல், வாய் நாற்றம், வாய்ப்புண் இவைகளுக்கு நல்லது. பற்களைக் கெட்டிப்படுத்தும்.

டின் 1–க்கு 0-75

## சற்குண பலாஸிபா லேகியம் (யூனனி)

இது ஈரல், இரைப்பை, மூளை, இருதயம் முதலிய உறுப்புக்களைப் பலப்படுத்துகின்றது. பக்கவாதம், முகவாதம், ஜன்னிவாதம் இவைகளைச் சுகப்படுத்துகின்றது. வாத ரோகத்தை நிவர்த்தி செய்யக்கூடியது. மறதியை நீக்கி, ஞாபக சக்தியை விருத்தி செய்யும். மந்தாக்னி ரோகத்தை நீக்கி, நல்ல பசியை உண்டாக்கும். நாக்குளறுதல், மூத்திர ஒழுக்கு, குறுக்கு வலி, கணு வாதம், குண்டிக்காயின்வலி, கீல்வாயு இவைகளைச் சுகப்படுத்தும். நரம்புகளுக்கு நல்ல பலத்தைக் கொடுத்து வீரிய விருத்தியை உண்டாக்கும். பத்தியமில்லை. கபத்தினாலும் வாயுவினாலும் உண்டாகும் உபத்திரவங்களை நீக்குவதில் சிறந்த மருந்து.

10 நாள் 20 வேளை மருந்து ரூ. 4–00

## சற்குண சுக சஞ்சீவி எண்ணெய்

ஒரு விசேஷமான சித்த மருந்து. பத்தியமில்லாதது. 41 வகை மூலிகைகளும், அநேக மருந்துச் சரக்குகளும் சுத்த ஆமணக்கு எண்ணெய்யும் சேர்த்து மிகுந்த பிரயாசையுடன் செய்யப்பட்டது. பிறந்த குழந்தை முதல் பாலர், வயோதிகர், கருப்பிணிகள், பிரசவித்த ஸ்திரிகள், யாவரும் கொஞ்சமும்

பயமில்லாமல் உபயோகிக்கக்கூடிய ஒரு அருமையான கைகண்ட மருந்து. ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்க வேண்டியது.

## மருந்தின் முக்கிய குணங்கள்

1. மலத்தை வெளிப்படுத்தும்
2. பசி உண்டாக்கும்
3. இரத்தத்தை நல்லபடி சுத்தி செய்யும்
4. உஷ்ணத்தைத் தணிக்கும்.
5. நரம்புகளுக்கு நல்ல பலமும், வீரிய விருத்தியும் கொடுக்கும்.
6. சரீரத்தின் வெளிப்பாகத்திலும், உட்பாகத்திலும் உள்ள புண்களையாற்றும்.
7. கடி விஷங்களின் விஷத்தையும், வலியையும் நீக்கும்.
8. மெலிந்த சரீரத்தைப் புஷ்டிப்படுத்தும்; கணைச்சூட்டை நீக்கும்.
9. காச ரோகத்திற்குக் குணம் கொடுக்கும்.

கீழ்க்கண்ட வியாதிகளுக்கு மிகவும் உபயோகமானது:-

## குழந்தைகளுக்கு

செவ்வாப்பு, செங்கிரந்தி, கருங்கிரந்தி, செங்கரப்பான், கருங்கரப்பான், மாந்தம், மாந்த வலிப்பு, விலாச்சுழியன் என்னும் தெற்கத்திக்கணை, கக்குவான் என்னும் குத்திருமல், இளைப்பு, வயிற்றளைச்சல், வாந்தி, கணைச்சூடு, வைசூரி இவைகளுக்குக் கைகண்டது.

## ஸ்திரிகளுக்கு

வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, கர்ப்பகால நோய் இவைகளுக்கு விசேஷமானது. இதை கருப்ப காலத்தில் உபயோகித்து வந்தால் தாயும் பிள்ளையும் நோயில்லாமலிருப்பதுடன் கஷ்டமில்லாமல் சுகப்பிரசவமாகும். 5, 6 மாதங்களில் ஏற்படும்

கர்ப்பச் சிதைவைத் தடுக்கும். பிரசவ வேதனை உண்டான பின் கொடுத்தால் சீக்கிரம் சுகப்பிரசவமாகும். பாலில்லாத தாய்க்கு பால் சுரக்கும்படி செய்யும்.

## புருஷர்களுக்கு

மேகம், மேகவெட்டை, நீருக்கு முன்பின் வெள்ளைபோதல், சொப்பன ஸ்கலிதம், துரித ஸ்கலிதம், வாதம், உடம்பு வலி, அசதி முதலியவைகளை நீக்கி பலத்தையும், உற்சாகத்தையும் உண்டாக்கும்.

## பொதுவாக

நாள்பட்ட மலச்சிக்கலை நீக்கி அதனாலுண்டாகும் பசி மந்தம், வாயு, வயிற்றுவலி, நெஞ்செரிவு, உடம்பு வலி, அசதி முதலியவைகளை நீக்கும். இரத்தத்தை நல்லபடி சுத்தி செய்யும். சிரங்கு, நாள்பட்ட சொரிசிரங்கு, மேகப்பத்து, தடிப்பு, இரணங்கள், வாய்ப்புண், குடல்புண், வயிற்றழைச்சல் இவைகளுக்குச் சஞ்சீவி. நீரழிவு வியாதிக்கும் குணம் கொடுக்கும். அதிக நீர் போவதையும் குறைக்கும்.

பாம்பு, நாய், எலி, பாம்புராணி, (அரணை) தேள் முதலிய எல்லா விஷ ஜந்துக்களின் கடி விஷங்களுக்கு சஞ்சீவி. விஷமானது சரீரத்தில் கெடுதி செய்யாமல் பாதுகாக்கும். அவஸ்தையை உண்டாக்கக் கூடிய தேள், பூரான் முதலியவைகளின் கடியினால் துடித்துக்கொண்டிருப்பவர்களுக்கு அரை அவுன்ஸ் உள்ளே கொடுத்தால் 5 முதல் 10 நிமிஷத்துக்குள்ளாகக் கடுப்பு இறைவனருளால் நின்றுவிடும். நரம்பு, பலவீனம், அசதி, சோம்பல் முதலியவற்றிற்கு ஒரு அருமையான டானிக்.

சிறுபிள்ளைகளுக்கு 30 சொட்டு முதல் கால் அவுன்ஸ் பெரியவர்களுக்குக் கால்முதல் அரை அவுன்ஸ் இரவு படுக்கப் போகும்போது தனியே அல்லது கொஞ்சம் பாலில் விட்டுச் சாப்பிடவும்.

| | | |
|---|---|---|
| 30 மி. லி. | பாட்டில் | ரூ. 1—00 |
| 60 மி. லி. | ,, | ரூ. 1—90 |
| 120 மி. லி. | ,, | ரூ. 3—75 |

## சற்குண ஸ்பெஷல் சுக சஞ்சீவி எண்ணெய்

சாதாரண எண்ணெய்க்குள்ள மூலிகைகள், மருந்துச் சரக்குகளுடன் கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ பச்சைக் கற்பூரம் முதலிய விலை உயர்ந்த வஸ்துக்கள் சேர்த்துச் செய்யப் படுகிறது. சாதாரண எண்ணெயை விட அதிகக் குணம் உள்ளது.

30 மி. லி. விலை ரூ. 1—50

## சற்குண தங்க பஸ்பம்
(Specific for Asthma)

இம்மருந்து முக்கியமாக ஜீரணக்கருவிகளுக்கும் மூளை இருதயம், ஈரல் முதலிய இராஜ கருவிகளுக்கும் நல்ல பலத்தைக் கொடுக்கின்றது. நல்ல பசியை யுண்டாக்கிச் சத்துள்ள ஆகாரத்தைச் சீக்கிரம் ஜீரணமாக்கி உடம்பில் சேரும்படி செய்கிறது. சரீரத்திலுள்ள எல்லா உறுப்புகளுக்கும் நல்ல பலம் கொடுக்கிறது. சுவாச காச வியாதியைப் போக்குவதில் இது விசேஷமான மருந்து மதுமேகம் என்னும் நீரிழிவு ரோகத்திற்கும் தனியாகவாவது அப்பிரகச் செந்தூரத்துடன் சேர்த்தாவது உபயோகித்தால் நல்ல குணம் கொடுக்கின்றது. இது பலவீனம் நரம்புத்தளர்ச்சி, பசியின்மை, அஜீரணம் ஈழை மந்தாரகாசம் முதலிய வியாதிகளுக்கு நல்ல சுகத்தைக் கொடுப்பதுடன் சரீர பலமும் வீரிய விருத்தியும் அதிகமாகும்படி செய்கிறது. இதனல் யாதொரு கெடுதியுமில்லை.

21 வேளை செந்தூரம் விலை ரூ. 80—00

## வெள்ளி பஸ்பம்

உலோகங்களில் வெள்ளி சீக்கிரமாக நீறுவதில்லை. பல புடங்கள் போட்ட பின்பே உபயோகிக்கத் தகுந்த பக்குவத்தில் அமைகிறது வெள்ளி. மேகம், மேகவெட்டை, இந்திரியம் நீத்திருத்தல், சிரசு, கண் ரோகங்கள், பீனிசம், பெருமூச்சு நரம்பு பலவீனம், தாதுக்குறைவு, இவைகளுக்கு நல்லது.

உஷ்ண சரீரங்களுக்கு மிகவும் உபயோகமானது. பெண்களுக் குள்ள வெள்ளைக்கும் நல்லது.

இந்திரியத்தைக் கட்டுப்படுத்தக் கூடியதும், நரம்புகளுக்கு பலம் கொடுக்கக் கூடியதும், மிகவும் சிரமத்துடன் கிடைக்கக் கூடியதுமான மூலிகைகள் கொண்டு தயார் செய்யப்பட்டது. பல புடமிடப்பட்டது. தேன் அல்லது பசுவின் நெய்யுடன் கலந்து சாப்பிடலாம். நல்ல லேகியங்களுடன் சாப்பிட்டால் குணம் அதிகரிக்கும்.

21 வேளை மருந்து ரூ. 10—50

## அப்பிரக செந்தூரம்

**(பல மூலிகைகள் கொண்டு பல புடங்கள் இடப்பட்டது)**

இந்திய வைத்திய சாஸ்திரத்தில் சிலாகித்துக் கூறப் பட்ட மருந்துகளில் அப்பிரக செந்தூரமும் முக்கியமானது. மேனாட்டு வைத்திய முறையில் தேர்ச்சி பெற்று இந்திய வைத்தியத்தைக் கையாண்டு வரும் பல இந்திய வைத்தியர்கள் நவீன முறைப்படி செய்த ஆராய்ச்சியின் மூலமாயும் அனுப வத்தின் மூலமாயும், அப்பிரக செந்தூரம் ஒரு சிறந்த மருந்தா யிருப்பதாக கூறியிருக்கிறார்கள். குஷ்டம், சுவாசம், விஷம், பிரமைகாசம், க்ஷயம், வாதம், கிராணி, பாண்டு, காமாலை, பவுந்திரம், நீரழிவு, பிரமேகம், மதுமேகம் முதலிய எல்லா வியாதிகளுக்கும் உபயோகமானது. சித்தவைத்தியர்கள் அப்பிரக செந்தூரத்தை மேகம், நீரழிவு, மதுமேகம், பவுந்திரம் முதலிய வியாதிகளுக்கு அதிகமாய்க் கையாண்டு வருகிறார்கள். அப்பிரகம் தளுக்கில்லாமல் நீற வேண்டியது முக்கியமானது. எவ்வளவுக் கெவ்வளவு புடம் அதிகமாகுமோ அவ்வளவிற்கு அப்பிரகம் அதிக குணம் கொடுக்கும். வீரிய விருத்திக்கும் அப்பிரக செந் தூரம் நல்ல மருந்து. உருக்கு செந்தூரம், காந்த செந்தூரம் அல்லது தங்க செந்தூரத்துடன் சேர்த்துச் சாப்பிட்டால் குணம் அதிகம்.

21 வேளைக்கு ரூ. 7—50

## அப்பிரக காந்த செந்தூரம்

அப்பிரகத்துடன் காந்தம் சேர்த்துச் செய்யப்பட்ட செந்தூரம். வாத, பித்த, கபக் கோளாறுகளால் உண்டாகும் எல்லா வியாதிகளுக்கும் மிகவும் பிரயோஜனமான உயர்ந்த மருந்தாக ஆயுர்வேதத்தில் கருதப் பட்டிருக்கிறது. ஈரல் ரோகம், மார்பு நோய், அருசி, மூர்ச்சை, பாண்டு, தலைச்சுற்று, சோகை, ஸ்திரீ ரோகங்கள், சுவாச ரோகம், அக்னி மந்தம், சூலை, அதிசாரம், சகலமான நேத்திர ரோகம், குஷ்டம், விரணம், கிழத்தனம் இவைகளுக்கு உபயோகமானது. அதிகமான இரத்தத்தையும் சரீர புஷ்டியையும் வீரிய விருத்தியையும் உண்டாக்கும். தந்தங்களுக்கு வலிவும் ரோமங்களுக்கு கருநிறத்தையும் உண்டாக்கும். மதுமேகம் என்னும் நீரழிவிற்கும், கிராணிக்கும், இரத்தக் குறைவிற்கும் ஒரு சிலாக்கியமான மருந்து.

21 வேளை மருந்து ரூ. 7—50

## 101 புட உருக்கு செந்தூரம்

மிகுந்த பிரயாசையுடன் முடிக்கப்பட்டது. இரத்தக்குறைவினால் உண்டாகும் எல்லா வியாதிகளுக்கும் மேலான மருந்து. சீக்கிரம் குணம் காட்டும். இரத்த விர்த்தி நரம்பு பலத்திற்கு முக்கியமான மருந்து.

21 வேளை மருந்து ரு. 10—50

## சற்குண கருவங்க பஸ்பம்

"வங்கம் சரியானால் தங்கம், இல்லாது போனால் பங்கம்" என்னும் பழமொழி யாவருக்கும் தெரிந்ததே. கருவங்கத்தை சரியானபடி சுத்தி செய்து மிகுந்த சிரமத்தின் பேரில் முடிக்கப்பட்டது. சரியானபடி முடிவு பெற்றிருக்கிறதாவென்று நன்கு பரிசோதனை செய்த பின்பே வெளியிடப்படுகிறது. மேகத்தினால் ஏற்படும் சகல வியாதிகளுக்கும் மிகுந்த பிரயோஜனம் கொடுக்கக் கூடியது. மேகம், பிரமேகம், நீரழிவு, மேகப்புண்கள், குஷ்டம், மேகப்பத்து,

பீனிசம், வாதம், சூலை, பக்கவாதம், மேகசூலை, புற்று வியாதிகள் முதலிய வியாதிகளுக்கும் நாயன் கிருபையால் சீக்கிரமாகக் குணம் கொடுக்கக் கூடியது.

21 வேளை மருந்து ரூ. 8—00

## சற்குண நாக பஸ்பம்

“நாகத்தைத் தின்று தேகத்தைப் பேணு” என்ற பழமொழிப்படி சரியான முறைப்படி முடிக்கப்பட்ட நாக பஸ்பம் ஒரு நல்ல மருந்து. எல்லாவிதமான சரீரங்களுக்கும் பொருந்தும். எல்லாவிதமான மேக ரோகங்களையும் குணப்படுத்துவதுடன் மூல ரோகத்திற்கும் ஒரு சிறந்த மருந்து. தாதைக் கட்டுப்படுத்தவும், உடம்பிற்கு பலம் கொடுக்கவும், உபயோகமானது. உஷ்ண சரீர முடையவர்களுக்கு மிகுந்த குணம் கொடுக்கக் கூடியது. வயிற்றளைச்சல், கிராணி, மூலக்கடுப்பு இவைகளுக்கு நல்லது. பெண்களுக்குள்ள வெள்ளை, குறுக்குவலி இவைகளுக்கும் நல்லது. மேகப் போக்கு சொப்பன ஸ்கலிதம் இவைகளை நீக்கும்.

21 வேளை மருந்து ரூ. 5—25

## சர்வகுணரச செந்தூரம்

சாதாரண குப்பியில் வைத்து எரிக்கப்படும் ரச செந்தூரம் குப்பியின் மேல்பாகத்தில் ஏறிப்பற்றிப் பிடித்திருக்கும். இம் மருந்தில் குருசேர்த்துச் செய்யப்படுவதால் ரசம் மேலே ஏறாமல் அடியில் உறுகிக் கட்டியிருக்கும்.

வியாதிகள் : மேகம், கிரந்தி, சொரி, கரப்பான், வாயு, சூலை, வாதம் 80, ஜன்னி, ஜுரம், மூலம், பவுந்திரம், குன்மம், திமிர், வெண் குஷ்டம் இவைகளுக்கு மிகவும் உபயோகமானது. முடக்கு வாதத்திற்கும், நரம்பு பலவீனத்திற்கும், எல்லாவித மான ஜுரங்களுக்கும் நல்ல குணம் கொடுக்கும்.

21 வேளை மருந்து ரூ. 10—50

## காள மேக நாருயண செந்தூரம்

சித்த வைத்தியத்தில் இது ஒரு மேலான மருந்து. கடுமையான வியாதிகளை உபத்திரவமில்லாமல் சொஸ்தப் படுத்தக் கூடியது சித்தவைத்தியத்திற்குப் பெருமை கொடுக்கக் கூடிய மருந்துகளில் முக்கியமானது. வாதம் 80, சிலேத்துமம் 96, எலிகடி, ஜன்னி, கபவாத ஜுரம், சூலை, குஷ்டம், இரணம், கடிவிஷம், அரையாப்பு, புற்று, கன்ன சூலை, பீனிசம், நெஞ்சு நோய், நெஞ்சடைப்பு, சத்திகுன்மம், எரிகுன்மம், வலிகுன்மம், கைகால் நடுக்கம், உதிரத்திரட்சி, விப்புருதி அண்டவாயு, பலவித சூலைகள் முதலிய அநேக வியாதிகளுக்கு உபயோக மானது. எல்லாவித வாதங்களுக்கும், பக்கவாதத்திற்கும், காசத்திற்கும், நிமோனியா என்ற கபவாத ஜுரத்திற்கும் ஒரு கைகண்ட மருந்து. எல்லாவித ஜுரங்களுக்கும் நல்லது.

21 வேளை மருந்து ரூ. 15—75

## பஞ்சலோக செந்தூரம்

பாண்டு, சோகை, காமாலை, இரணம், புண் புரைகள், மேகப்புண்கள், லிங்கப்புற்று, யோனிப்புற்று, கண்டமாலை, சூதகவலி, அண்டவாயு, திமிர்குஷ்டம், குன்மம், அக்கினி மந்தம், கப்ரோகங்கள் இவைகளுக்கு குணம் கொடுக்கும்.

திரிகடுகு, சூரணம் சேர்த்து தேன் அல்லது பசுவின் நெய்யுடன் கலந்து காலை, மாலை சாப்பிடவும்.

21 வேளை மருந்து ரு. 31—50

## அயக் காந்த செந்தூரம்

அயம் காந்தம் சேர்ந்த மருந்து. இரத்தக் குறைவு, பாண்டு, சோகை, காமாலைக்கு நல்லது.

21 வேளை மருந்து ரூ. 5—25

## சற்குண சஞ்சீவி பஸ்பம்

மேகப்பத்து, கிரந்தி, குஷ்டம், திமிர், யானைச்சொறி, தடிப்பு இவைகளுக்கு ஒரு மேலான மருந்து. ஏழுவேளை

உபயோகித்தால் கடவுள் கிருபையால் நல்ல குணம் கொடுக்கும். வியாதியஸ்தர்களை நேரில் பார்த்து மருந்து கொடுக்கப்படும்.

7 வேளை மருந்து ரூ. 5—00

## சற்குண தாளக செந்தூரம்

ஜுரம், கப சம்பந்தமான வியாதிகளையும், இரத்தக்கேடு சம்பந்தமான வியாதிகளையும் போக்குவதில் தாளகம் என்னும் அரிதாரம் மிகவும் சிறந்த மருந்தாய் இருந்தபோதிலும் அதில் சில துர்க்குணங்களுண்டு. அவைகளை நீக்குவது மிகவும் பிரயாசை. எங்கள் தாளக செந்தூரம் யாதொரு கெடுதலும் செய்யாது. 6 மாதக் குழந்தைக்கும் கொடுக்கலாம்.

21 வேளை மருந்து ரூ. 5—25

## சற்குண பவள பஸ்பம்

உஷ்ணம், இருமல், உடல்எரிச்சல், நீர்எரிச்சல், வெள்ளை, கண்எரிச்சல் முதலியவைகளுக்கு நல்லது. பசுவின் நெய் அல்லது பசுவின் வெண்ணையுடன் கலந்து சாப்பிடவும்.

21 வேளை மருந்து ரு. 5—25

## இருதய ரோகம்

மனிதன் சரீர சௌக்கியத்துடனிருந்து அவனின் நித்திய கடமைகளை நிறைவேற்றுவதற்கு அவன் சரீரத்திலுள்ள எல்லா உறுப்புகளும், முக்கியமாக ஈரல் (LIVER) இரப்பை (Stomach) குண்டிக்காய் (Kidneys), மூளை (Brain), இருதயம் (Heart) ஆகிய ஐந்து உறுப்புகளும் நல்ல நிலைமையிலிருந்து தங்கள் தொழில்களைச் சரிவரச் செய்து வரவேண்டும். இவ்வுறுப்புகள் மிக்க பிரதான மானவை. யூனானி வைத்தியத்தில் இவ்வுறுப்புகளை ராஜ உறுப்புகள் எனச் சொல்லுவார்கள். பல வியாதிகளுக்கு சிகிச்சை செய்து வரும்போது இவ்வுறுப்புகளைப்பற்றி கவனத்தில் வைத்து சிகிச்சைசெய்ய வேண்டும். இவை எல்லாவற்றிலும் மூளையும் இருதயமும் பிரதானமானவை.

இவை இரண்டிற்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. ஒன்றில் பலக்குறைவோ, கோளாறோ ஏற்படும்போது மற்றதையும் பாதிக்கும். இவையிரண்டிலும் முக்கியமானது இருதயம் உயிர் தொடங்குவதும் இருதயத்தில்தான். ஒடுங்குவதும் அங்குதான். சரீர சௌக்கியத்திற்கு இருதயம் நல்ல நிலைமையிலிருக்க வேண்டியது இன்றியமையாதது. இருதயத்தில் கோளாறு ஏற்பட்டால் மனிதனின் வாழ்க்கையையே அது மிகவும் பாதிக்கும். இருதயத்தில் கோளாறு ஏற்பட்டு பலவீனம் அடைவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

கீழ்க்கண்ட காரணங்கள் முக்கியமானவை.

1. அதிகமாகப் பட்டினியிருத்தல்.
2. களைப்புண்டாகும்படி அளவுக்கதிகமாக சரீர உழைப்பு எடுத்தல்.
3. சரீர போஷணைக்கு அவசியமான சத்துள்ள ஆகாரங்களை உட்கொள்ளாமலிருத்தல்.
4. காப்பி, தேயிலை அதிகம் அருந்துதல்.
5. அதிகச் சூடான ஆகாரங்களையும் ஐஸ், ஐஸ்கிரீம் போன்ற அதிகக் குளிர்ச்சியான வஸ்துக்களையும் அதிகமாக அருந்துதல்.
6. வாயு உண்டாக்கக் கூடிய ஜீரணத்திற்குக் கடினமான ஆகாரங்களை உட்கொள்ளல்.
7. அளவுக்கதிகமாக குடும்ப வாழ்க்கையில் ஈடுபடல்.

மேற்கண்டவை இருதயத்தை மிகவும் பாதிக்கின்றன.

இவைகளைவிட இருதயத்திற்கு அதிகம் கேடுசெய்வது அதிகமான மனோ உழைப்பும், மனக்கவலையுமாம். ஜீவனத்திற்குப்போதிய செல்வம் இருந்தாலும் மேலும் மேலும் பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற பேராசையின் காரணமாக இக்காலத்தவர் பல தொல்லைகளில் அகப்பட்டு பலவித யோசனையும் மனக்கவலையும் கொள்ளுவது இருதயத்தை அதிகம் பாதிக்கின்றது. கவலை இருதயத்தை வெகு சீக்கிரத்தில் பலவீனப் படுத்திவிடுகின்றது. இவைகளன்றி இக்காலத்திய சிகிட்சை

முறையான இஞ்சக்ஷனும் [அதாவது ஊசி மூலம் மருந்தை சரீரத்தினுள் செலுத்துதலும்] இருதயத்தைப் பாதிக்கின்றது. அதிகமாக இஞ்சக்ஷன் எடுத்துக்கொண்டவர்களின் இருதயம் பலவீனமடைந்தேயிருக்கும். இக்காலத்திய மனிதர்களில் 100க்கு 80 பேருக்கு மேலாக இருதயக்கோளாரில் அகப்பட்டவர்கள் என்று சொல்வது மிகையாகாது.

இருதயம் பாதிக்கப்பட்டிருந்தால் கீழ்க்கண்ட கோளாறுகளிருக்கும்.

1. மனக்கலக்கம், எண்ணங்கள் குழப்பமாயிருப்பது.
2. அதிகமான பயம், மன தைரியமில்லாமலிருத்தல்.
3. எப்போதும் மனக்கவலையாயிருப்பது, மனதில் சந்தோஷம் இல்லாமலிருப்பது, சிறிய விஷயத்தினுலும் மனம் கலங்கிவிடல்.
4. எப்போதும் சந்தேக எண்ணம் அதிகம் இருத்தல்.
5. உற்சாகமில்லாமல் எப்போதும் அசதியாகவும், மனந் தளர்ந்துமிருத்தல்.
6. அடிக்கடி மயக்கம் உண்டாதல்.
7. நடந்தால், வேலை செய்தால் மூச்சுமுட்டுதல்.
8. குடும்ப வாழ்க்கையில் பிரியமில்லாமலிருத்தல்.
9. வேலை செய்வதிலும், சரீர உழைப்பு எடுப்பதிலும் வெறுப்பு.
10. ஞாபக சக்தி மிகக் குறைந்திருப்பது. அதிக யோசனை செய்யமுடியாமலிருப்பது.

இவைகள் இருதயக் கோளாறுக்கு முக்கியமான அடையாளங்கள். இருதயக் கோளாறுக்கு சிகிச்சை செய்யும்போது ஜீரணத்தைப்பற்றியும் கவனித்து சிகிச்சை செய்யவேண்டும். சரீரத்தில் உஷ்ணம் அதிகம் இருக்கிறதா, குளிர்ச்சி அதிகம் இருக்கிறதா என்பதைக் கவனித்தல் வேண்டும். இருதய சம்பந்தமான வியாதியில் உஷ்ண சரீரத்திற்குக் கொடுக்க வேண்டிய மருந்து குளிர்ச்சியான சரீரத்திற்குப் பொருந்தாது.

அதேபோல் குளிர்ச்சியான சரீரத்திற்குள்ள மருந்து உஷ்ண சரீரத்திற்குப் பொருந்தாது. சரீரத்தின் சுபாவத்தையனுசரித்து மருந்து கொடுக்க வேண்டும். தற்காலம் அனுஷ்டானத்திலிருந்து வரும் பல வைத்திய முறைகளில் யூனானி வைத்தியத்தில்தான் இருதயம், மூளை சம்பந்தமான வியாதிகளுக்குக் கைகண்ட சிகிச்சை முறைகள் இருக்கின்றன. இருதயக் கோளாறுகளை நீக்கி இருதயத்தைப் பலப்படுத்தும்படியான சில முக்கிய மருந்துகளை மட்டும் இவ்விடம் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

## அமிர்த கஸ்தூரி லேகியம்

[தவாவுல் மிஸ்க்]

இது மண்ணீரல், இரப்பை, இருதயம், மூளை முதலியவைகளைப் பலப்படுத்தும். ஆகாரம் நன்கு ஜீரணமாகும்படி செய்யும். கெட்ட ஆவி மூளைக்கேறி மனக்கலக்கம் உண்டாகாதபடி தடுக்கும். இருதயத்தைப் பலப்படுத்தி இருதயத்தில் வலி, பயம் இவைகளை நீக்கும். குங்குமப்பூ, கஸ்தூரி முதலிய விலையுயர்ந்த வஸ்துக்கள் சேர்ந்தது.

20 வேளை மருந்து ரூ. 10—00

## அம்பர் லேகியம்

ஜீரண சக்தியை விருத்தி செய்து நரம்புகளுக்குப் பலம் கொடுக்கின்றது. உடம்பைப் புஷ்டிப்படுத்தி சரீரத்தின் எடையைக் கூட்டும். மூளைக்கும், இருதயத்திற்கும் பலம் கொடுக்கும். உட்கார்ந்து எழுந்திருக்கும்போதும், படுத்து எழுந்திருக்கும்போதும் உண்டாகும் மயக்கம், கிறுகிறுப்புக்கு ஒரு சிறந்த மருந்து. பக்கவாதம் உண்டாகாமல் தடுக்கும். நரம்புகளுக்கு முறுக்கேற்றி வீரிய விருத்தியை உண்டாக்கும். விவாகம் இல்லாதவர்கள் நீடித்த நாள் உபயோகிக்கக்கூடாது. மலத்தைக் கட்டாது.

20 வேளை லேகியம் விலை ரூ. 10—00

## இருதய பலகாரி மாத்திரை

இருதயத்தைப் பலப்படுத்தி, இருதயத்துடிப்பு, மனக் கலக்கம் முதலிய கோளாறுகளை நீக்கும். வாயு உபத்திரவத் தையும் குணப்படுத்தும். மதுமேக வியாதிக்கும் நல்லது.

40 மாத்திரை விலை ரூ. 10—00

## சற்குண முஸபி லேகியம்

மலத்தைப் போக்குவதற்காக உபயோகிக்கப்படும் மருந்து களில் இது விசேஷமானது. வயிற்றுவலி, வயிற்றுப் பிரட்டல் யாதொன்றும் இல்லாமல் சுலபமாக மலத்தைப் போக்கு கின்றது. மலத்தைப் போக்கும் மற்ற மருந்துகளைப்போல் இது உஷ்ணப்படுத்துவதுமில்லை. சிறு குழந்தைகள் முதல் கருப் பிணிகள் வரை யாவரும் யாதொரு பயமின்றி உபயோகப்படுத் தலாம். இது மலத்தைப் போக்குவதுடன் இரத்தத்தையும் சுத்திகரிக்கின்றன. பலவிதமான புண் புரைகள், பத்துக்கள், சிரங்கு, சொரி இவைகளுக்கு மிகவும் உபயோகமானது.

கருப்பிணிகளுக்குப் பிரசவ வலி ஆரம்பித்தபின் குழந்தை பெறத் தாமதப்பட்டால் இது நாயன் கிருபையால் மலத்தையும் போக்கி சீக்கிரம் பிரசவம் ஆகும்படி செய்கிறது. இதனால் ஒரு கெடுதியும் ஏற்படுவதில்லை. ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய மருந்து.

100 கிராம் மருந்து ரூ. 4—00

## சற்குண அம்பர் டானிக் பில்ஸ்

தளர்ந்து போன நரம்புகளுக்கு பலம் கொடுத்து வீரிய விருத்தி உண்டாக்குவதில் சிறந்தது. விசேஷ மருந்துகள் சேர்த்து செய்யப் பட்டது.

20 மாத்திரை விலை ரூ. 10—00

## மலசுத்தி லேகியம்.

இரவு சாப்பிட்டால் காலையில் உபத்திரவமில்லாமல் மலம் போகக்கூடியது.

10 வேளை மருந்து ரூ 3—00

## சித்தர் சூரணம்

பித்தம், வாய்க் கசப்பு, வாய் மழுமழுப்பு, தலைச்சுற்று மயக்கம் முதலியவைகளுக்கு உபயோகமான சித்த மருந்து.

20 வேளை டின் விலை ரூ 1—50

## சற்குண ஆரோக்கிய சூரணம்

மலத்தை ஒழுங்காக வெளியாக்கி, வாயுவைக் கண்டித்து நல்ல பசி உண்டாக்குகிறது. பல வியாதிகளுக்கு உபயோக மானது. [சாப்பிடும் முறை] காலை மாலை ஆகாரத்துக்கு ஒருமணி நேரத்துக்கு முன் மூன்றுவிரல் கொண்ட அளவு எடுத்து வாயில் போட்டு மேல் கொஞ்சம் வெந்நீர் அல்லது தண்ணீர் சாப்பிடவும். பத்தியமில்லை.

20 வேளை டின் விலை ரூ 1—50

## சற்குண ஆரோக்கிய லேகியம்

யூனானி முறைப்படி செய்யப்பட்ட அனுபவ சித்தமான மருந்து. பசியுண்டாக்கும் ஆகாரத்தை நன்கு ஜீரணமாகும்படி செய்யும். வாயு உபத்திரவம், கபம் அதிகரிப்பதால் உண்டாகும் இருமல், மூல வாய்வு, கணுக்களின் வாதம், மேகப்படை, குளிர்ச்சியின் காரணமாக அதிக மூத்திரம் போவது தலைவலி இவைகளைக் குணப்படுத்தும். சரீரத்திலுள்ள எல்லா உறுப்பு களுக்கும் பலம் கொடுக்கும், வீரிய விருத்தியுண்டாகும். குளிர்ச்சி யான சரீரத்திற்கும் வாயு வாத சரீரத்திற்கும் மிகவும் பொருத்த மானது. பத்தியமில்லை அதிக உஷ்ணமான சரீரத்திற்குக் கொடுக்கவேண்டாம்.

20 வேளை மருந்து ரூ. 5—00

## சற்குண ரோஜா அமிர்த எண்ணெய்

யூனானி முறைப்படி செய்யப்படுவது, கண் எரிச்சல் மூளைக் கொதிப்பு, அதிகமான உஷ்ணம் இவைகளுக்கு சிரசில், தேய்த்து

முழுகினால் நல்ல குணம் கிடைக்கும். உள்ளே சாப்பிட்டால் மலச்சிக்கலையும் நீர்க்கடுப்பையும் நீக்கும். வயிற்றுவலி உபத்திரவத்திற்கு அடிவயிற்றில் தடவினால் வாயுவைப் பிரித்துக் குணம் கொடுக்கும்

ஒரு அவுன்ஸ் விலை ரூ. 0—60

## சற்குண பலாஅஸ்வகெந்திலாக்ஷாதி தைலம்

க்ஷயம், க்ஷயஜுரம், உடம்பு இளைத்தல் முதலியவைகளுக்குத் தேய்த்து ஸ்நானம் செய்யக் கூடியது. ஜுரத்தை நிறுத்தும். நல்ல குணம் கொடுக்கும்.

ஒரு அவுன்ஸ் விலை ரூ. 1—00

## சற்குண சஞ்சீவி மெழுகு

சித்த வைத்தியத்திலுள்ள மேலான கைகண்ட மருந்துகளில் இது ஒன்று.

வண்டுகடி, ஓந்திகடி, அரணைகடி, எலிகடி முதலிய கடி விஷங்கள், குஷ்டம், கரப்பான், பலவிதமான புற்று ரோகங்கள், ஆனைக்கால் வீக்கம், பத்து படைகள், வாய்வு, பவுந்திரம், அண்ட வாதம், பலவித வாதங்கள், வலிப்பு ரோகங்கள், கிரந்தி ரோகங்கள் புழு பற்றிய இரணங்கள், கடுவன் ரோகம், இவைகளுக்கு மிக்க குணம் கொடுக்கக் கூடியது. வெண் குஷ்டத்துக்கும் யானைத்தோல் போன்ற கரும் பத்துக்கும் கைகண்ட குணம் கொடுக்கக் கூடியது.

40 வேளை மருந்து ரூ. 20—00

## சற்குண சர்வாங்கத் தைலம்

பல விசேஷமான மூலிகைகளும் கடைச்சரக்குகளும் சேர்ந்த இந்தத் தைலம் பல வியாதிகளுக்கு நற்குணம் கொடுக்கக் கூடியது.

### உபயோக விபரம்

வாதம் 80, சூலை 18, கரப்பான், ஜன்னி, வலிப்பு, வாயு, விக்கல், இளைப்பு, இருமல், தொண்டைக்குள் இருக்கும் புற்று,

மூக்குப்புண், காதுப்புண், நெஞ்சுவலி, அண்டவாய்வு, மூச்சடைப்பு, மாந்த இழுப்பு, பிரசவ சன்னி, முடக்குச்சூலை, மந்தாரகாசம், திமிர், விறுவிறுப்பு, கபால நீர், வர்மம் இவைகளுக்கு உள்ளே சாப்பிடவும்.

எல்லாவிதமான ஜன்னிக்கும் மாந்த இழுப்புக்கும் இஞ்சி, வெள்ளைப்பூடு சாறு எடுத்து அதில் விட்டுக் கொடுக்கவும்.

வாய்வுக்குத்து, மூச்சடைப்பு, திட்டுமுட்டு அடித்தல், குடல் பிரட்டல் இவைகளுக்கு வெந்நீரில் விட்டுக் கொடுக்கவும்.

விக்கல், வாந்திக்கு, ஏலம், நெல்பொறி, கிராம்பு, மாதுளை தோடு இவைகளை அவித்தகஷாயத்தில் விட்டுக் கொடுக்கவும்.

சூலைநீர், முடக்குச் சூலைக்கு பெருஞ்சீரகக் கஷாயத்தில் விட்டுக் கொடுக்கவும். மூன்று நாள் உப்பில்லா பத்தியம்.

அண்டவாய்வுக்கு இசங்கு வேர் கஷாயத்தில் விட்டுக் கொடுக்கவும். அல்லது வெந்நீரில் விட்டுக் கொடுக்கவும்.

ஆஸ்த்மா [சுவாசகாசம்] என்னும் இளைப்பு வியாதிக்கு வெந்நீரில் விட்டுக் கொடுக்கவும்.

நெஞ்சுவலிக்கு முக்கா வேளை வேர் கஷாயத்தில் விட்டுக் கொடுக்கவும்.

பிரசவ ஜன்னிக்கு உள்ளுக்குக் கொடுத்தும் மேலேயும் தடவவும். மூன்று நான்கு சொட்டுக்கள் நாசிக்குள் விடவும்.

எலி கடி, பூனை கடி, நாய் கடி முதலான கடி விஷங்களுக்கு உள்ளுக்குக் கொடுத்து மேலேயும் தடவவும்.

## அளவு

**பெரியவர்களுக்கு :**

அரை டீஸ்பூன் அளவு அல்லது 15 முதல்
25 சொட்டு வரை

**சிறு பிள்ளைகளுக்கு**

5 முதல் 10 சொட்டு வரை கொடுக்கலாம்.

வெளிப் பிரயோகம் :

சகலவிதமான வலி, நெஞ்சில் சளிக்கட்டு, காதுக்குத்து, காதடைப்பு, நகச்சுத்து, தலைவலி, பல்வலி, எகிறு வீக்கம், அலகுப் பூட்டு, விதை வீக்கம் முடக்கு வாதம், அரையாப்பு, வர்மப் பிடிப்பு, கழுத்துப் பிடிப்பு, கழலை, முகப்பரு, சிலந்தி, ராஜபிளவை, கன்னப்புத்து, பத்து படைகள், சிலந்திக் கட்டி, அடிபட்ட காயம், தொண்டைக்குள் சதை வளர்ச்சி இவைகளுக்கு வெளிப் பிரயோகம் செய்யவும்.

---

**குறிப்பு**:— கஷாயத்திற்குள்ள சாமான்கள் கிடைக்கவில்லையானால் தைலத்தை குறைந்த அளவு வெந்நீரில் விட்டுக் கொடுக்கவும் அல்லது தேனுடன் கலந்து கொடுக்கவும். தைலத்தைக் காலையில் வெறும் வயிற்றிலும், மாலை 5 முதல் 7 மணிக்குள்ளாகவும் சாப்பிடவும்.

பத்தியம்: பழைய சாதம், தயிர், மோர், புளிப்பு வஸ்துக்கள் முதலியன நீக்கவும்.

கர்ப்ப ஸ்திரீகளுக்கு இழுப்புக்கண்டால் தலையில் தேய்த்துக் குளிக்கவும். அடிக்கடி ஜலதோஷம் பிடிப்பதற்கும் இளைப்பு வருவதற்கும் உச்சியில் தேய்த்துக் கொள்ளவேண்டும்.

கால் அவுன்ஸ் விலை ரூ. 1—25

# சற்குண சித்தாதி எண்ணெய்

என்னும்

# சொட்டு எண்ணெய்

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் ஒருவித உபத்திரவ மில்லாமல்

**மலத்தைப் போக்க ஒரு சிறந்த மருந்து**

வயிற்றுவலி, வயிற்றுப் பிரட்டல், வாந்தி, விக்கல், குன்மம், பௌந்திரம், சூலை சூதகக்கோளாறு, கிருமி உபத்திரவம், சிரங்கு கிரந்தி, அரையாப்பு, மண்டையிடி,

காதடைப்பு முதலிய பல வியாதிகளுக்கு உபயோகமானது. குழந்தைகள் தொக்கத்திற்கும் நல்லது.

## உபயோகிக்கும் முறை

சூடான பால்விடாத காப்பியில் அளவுப்படி விட்டுக் கொடுக்கவும். காப்பிக்கு இனிப்பு சேர்த்துக்கொள்ளலாம்.

வயிற்றில் புளிப்பு அதிகமிருந்தால் இஞ்சிச்சாற்றில் விட்டுக் கொடுக்கலாம்.

கிருமி உபத்திரவம் அதிகமிருந்தால் பெரிய ஆளுக்கு அரை ரூபாய் எடையுள்ள வாய் விளங்கத்தைக் கஷாயம் போட்டு அதில் விட்டுக்கொடுக்கவும்,

தொக்கத்திற்கு வெள்ளாட்டுப் பாலில் விட்டுக் கொடுக்கவும்.

சிறு குழந்தைகளுக்குத் தாய்ப்பாலுடனும், வெந்நீருடனும் சேர்த்துக்கொடுக்கலாம்.

மூன்று நான்கு தடவை கொல்லைபோகும். பசி வந்ததும் அரிசிக் கஞ்சி சாப்பிடவும். இரவும் லேசான ஆகாரமாகச் சாப்பிடவும். அன்று குளிக்கக்கூடாது.

## அளவு

| | | |
|---|---|---|
| 3 மாதம் முதல் | 1 வயது வரை | 5 முதல் 7 சொட்டுகள் |
| 1 வயது முதல் | 3 வயது வரை | 7 முதல் 10 சொட்டுகள் |
| 3 வயது முதல் | 5 வயது வரை | 9 முதல் 12 சொட்டுகள் |
| 5 வயது முதல் | 15 வயது வரை | 12 முதல் 18 சொட்டுகள் |
| பிராயம் உள்ளவர்களுக்கு | | 18 முதல் 25 சொட்டுகள் |

மலம் போவதற்குத் தக்கப்படி அளவைக்கூட்டி குறைத்துக் கொள்ளவும். அவசியப்பட்டபோது ஒன்றுவிட்டு ஒரு நாளாக மூன்று நான்கு தடவை கொடுக்கலாம். இரண்டாவது தடவை முதலாக அளவைக் குறைத்துக்கொள்ளவும்.

**குறிப்பு:—** கொல்லை போவதை நிறுத்த விரும்பினால் வசம்புத்துண்டை அடுப்பில் புகுத்தி சாம்பலாகாதபடி கருக்கி

நுணுக்கி இரண்டு விரல் கொண்ட அளவு தேனில் குழப்பி சாப்பிடவும்.

கால் அவுன்ஸ் பாட்டில் விலை ரூ. 0—65

## மருந்து சாப்பிடும் போது கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயங்கள்.

1. மலச்சிக்கல் அதிகமிருந்தால் மருந்து சாப்பிட ஆரம்பிக்குமுன் பேதிக்குச் சாப்பிட்டுக்கொள்வது நலம்.

2. சாதாரணமாக எல்லா மருந்துகளும் காலை வெறும் வயிற்றிலும் மாலை 5 முதல் 7 மணிக்குள்ளும் சாப்பிட வேண்டும்.

3. மருந்து சாப்பிட்டு அரை மணி நேரம் அல்லது ஒரு மணி நேரம் கழித்து ஆகாரம் சாப்பிட வேண்டும்.

4. சீக்கிரமாக குணம் பெறலாம் என்ற எண்ணத்துடன் மருந்தின் அளவைக் கூட்டி உபயோகிக்கக் கூடாது.

5. மருந்து சாப்பிடும்போது வயிற்றில் அஜீரணம் உண்டாகாமல் கவனித்துக்கொள்ளவும்.

6. மலத்தைப் போக்குவதற்காக மருந்து இரவு சாப்பிடுவதானல் ஆகாரம் சாப்பிட்டு 2 மணி நேரம் கழித்து கொல்லைபோகும் மருந்தைச் சாப்பிடவும்.

7. பேதிக்காக மருந்து சாப்பிட்டதில் மருந்தின் அளவு குறைவினல் கொல்லை போகவில்லையானல் மறுபடியும் அன்று பேதிக்காக மருந்து சாப்பிட வேண்டாம். மறுநாள் அளவைக்கூட்டிச் சாப்பிடவும்.

8. பஸ்ப செந்தூரங்கள் சாப்பிடும்போது மீன், நல்லெண்ணெய், புளி, பாவற்காய், அகத்திக் கீரை, பழைய சாதம், பூசணிக்காய், முதலிய விஷ பதார்த்தங்களையும் மந்தமான ஆகாரங்களையும் நீக்கவும். விலக்கப்பட்ட சாமான்களை

உபயோகித்தாலும் மருந்து கேடுசெய்யாது. ஆனால் குணம் குறையும்.

9. எண்ணெய் ஸ்நானத்தன்று பஸ்ப செந்தூரங்களை நிறுத்திக் கொள்ளவும். மருந்து சாப்பிட்டு இரண்டு மணி நேரத்துக்குப்பின் குளிக்கவும். அல்லது மருந்து சாப்பிடு முன் குளித்துக் கொள்ளவும்.

10. பஸ்ப செந்தூரங்களில் சில சாப்பிட்டு வரும்போது குணம் தெரியாது. கொஞ்சநாள் சென்ற பின்பே குணம் காட்டும். ஆனதால் மருந்து சாப்பிட்டு விட்டுக் கொஞ்ச நாள் வரை பொறுத்திருக்க வேண்டும்.

11. வீரிய நஷ்டம் அடைந்தவர்கள் சீக்கிரம் பலத்தை அடைந்து விடலாமென்று எண்ணக்கூடாது. என்ன காரணங்களால் தாது பலவீனப்பட்டதோ அவை யனைத்தும் நீங்கினால் தான் வீரிய சக்தியுண்டாகும். அகப்பத்தியத்துடன் தொடர்ச்சியாகக் கொஞ்சநாள் மருந்து உபயோகித்தால் நல்ல குணம் உண்டாகும்.

## வியாதியின் விபரம்.

1. பெயரும் விலாசமும்
2. ஆண் அல்லது பெண்
3. வயது
4. மெல்லிய சரீரமா, கனத்த சரீரமா?
5. மலம் சரியாகப் போகிறதா?
6. மூல உபத்திரவம் உண்டா?
7. நீருக்கு முன் அல்லது பின் வெள்ளை போகிறதா? சதா வெள்ளைப் போக்கு உண்டா?
8. சொர்ப்பன ஸ்கலிதம் அடிக்கடி உண்டா?
9. விவாஹம் ஆகியிருக்கிறதா?

10. நீர் எரிச்சல் இருக்கிறதா? தினம் இரவு எத்தனை தடவை நீர் போகிறது? பகலில் எத்தனை தடவை நீர் போகிறது?

11. மர்ம ஸ்தானத்தில் புண் வந்தது உண்டா?

12. பசி சரியாகயிருக்கிறதா?

13. இருமல் உண்டா? எவ்வளவு நாளாக? கபம் வெளிப்படுகிறதா?

14. வாய்க்கசப்பு, மழுமழுப்பு உண்டா?

15. உடம்பில் வலி உண்டா? எந்தப் பக்கத்தில்?

16. குழந்தைகள் உண்டா?

17. தூக்கம் சரியாயிருக்கிறதா?

18. ஞாபகசக்தி எப்படியிருக்கிறது?

19. வேகமாய் நடந்தாலும், ஏற்றம் ஏறினாலும் மூச்சு முட்டுகிறதா?

20. ஆயாசம், படபடப்பு ஏற்படுகிறதா?

21. உடம்பில் பலக்குறைவு, அசதியிருக்கிறதா?

22. நீரில் சர்க்கரை அல்லது அல்பூமன் இருக்கிறதா?

23. ஸ்திரியாயிருந்தால் மாதவிடாய் சரியாய் காலா காலத்தில் வருகிறதா?

24. மாதவிடாய் காலத்தில் வயிற்றுவலி, குறுக்குவலி உண்டா?

25. தற்சமயம் கர்ப்பமுண்டா? அப்படியானால் எத்தனை மாதம்?

26. உடம்பின் தற்போதைய நிலை?

---

[குறிப்பு: மேற்காணும் கேள்விகளுக்கு தனியாக ஒரு தாளில் பதில் எழுதி அனுப்பினால் இன்ன வியாதி என்று அறிய ஏதுவாக இருக்கும்.]

## நிபந்தனைகள்:

1. மருந்துகளின் கிரையம் ரொக்கமாகக் கொடுக்க வேண்டும்.

2. மருந்துகளின் விலைகள் கால நிலைக்கேற்ப மாறுதல் அடையும்.

3. ரூபாய் 25-க்கு அதிகம் பெறுமானமுள்ள மருந்துகளுக்கும் ரயில், லாரி மூலம் அனுப்ப வேண்டிய மருந்துகளுக்கும் கிரையத் தொகையில் நான்கில் ஒன்று முன்பணமாக அனுப்ப வேண்டும். மீதத்துக்கு V. P. அனுப்பப்படும்.

4. அனுப்பப்படும் மருந்துகள் நல்ல விதமாகவே பாக்கிங் செய்து அனுப்பப்படும். வழியில் ஏற்படும் சேதாரத்துக்கு மருந்துச்சாலை உத்திரவாதியில்லை.

5. மருந்துகளுக்கு எழுதும்போது பெயரையும் முழு விலாசத்தையும் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் தெளிவாக எழுத வேண்டும். ரயில் அல்லது லாரி மூலம் அனுப்ப வேண்டியதிருந்தால் பக்கத்து ரயில்வே ஸ்டேஷன் அல்லது லாரி ஆபீஸை குறிப்பிட்டு எழுத வேண்டும்.

6. ஆர்டர் கொடுக்கப்படும் மருந்துகள் கைவசம் இல்லையானால் தயாரானவுடன் அனுப்பப்படும்.

7. கேட்லாக்கில் உள்ள மருந்துகள் அல்லாமல் ஸ்பெஷல் மருந்துகளும் செய்து கொடுக்கப்படும்.

8. வியாதியின் முழு விவரங்களையும் எழுதினால் அவற்றை நன்கு கவனித்து என்ன மருந்துகள் உபயோகிக்க வேண்டுமென்பதை எழுதுவோம்.

9. வியாதி சம்பந்தமான கடிதங்கள் யாவும் மிகவும் ரகசியமாகவே வைக்கப்படும்.

10. விலை விஷயத்தில் வைத்தியர்களுக்கும், ஏஜண்டுகளுக்கும் சௌகரியம் செய்து கொடுக்கப்படும்.

# எங்களிடம்

## எல்லா லோகங்களின் பஸ்ப செந்தூரங்கள் உண்டு.

முக்கியமாக எல்லா விதமான வாதம் காசம், குன்மம் மது மேகம் என்னும் நீரழிவு, இருதய பலவீனம், மூளை பலவீனம், எக்ஸிமா என்னும் கால்கடுவன் பலவிதமான இருமல், வீரிய சக்திக் குறைவு முதலியவற்றிற்கு நாயன் கிருபையால் நல்ல குணம் கொடுக்கக்கூடிய கைகண்ட சித்த, ஆயுர்வேத, யூனானி மருந்துகள் உண்டு.

மேலும் நயம் தேன், கஸ்தூரி, கோரோசனை குங்குமப்பூ, குல்கந்து, பன்னீர் முதலியன கிடைக்கும்.

---

எங்கள் மருந்துகளை விற்பனை செய்ய
விரும்புகிறவர்களுக்கு தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்
வியாபார நிபந்தனைகளுக்கு எழுதினால்
அனுப்பிவைக்கப்படும்.

M. ஜமால்முஹம்மது
(ரிஜிஸ்டர்டு மெடிக்கல் பிராக்டிஷனர்)
புரோப்ரைட்டர்

ஹி[illegible]ால் பிரஸ், திருநெல்வேலி-6.